www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE - FRANCE

Kenya

# தூண்டில்



அராஜக
அரசியலில்
அகப்பட்டு,
அடைக்கப்பட்டு
அல்லல்படும்
அகதிகளின்
அவலங்கள் கூட
அரசிய(வி)ல் விளையாட்டாகிறது.

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.28

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

இலங்கையிலிருக்கும் பல 'பிரஜைகள்

கொழும்பிலே தற்போது சிங்கள 'சிறி' எழுத்துப் பொறிக்கப்படாத நம்பர் தகடுகளுடன் வாகனங்கள் ஓடத் தொடங்கியுள்ளன. இலங்கை அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து இவ்வருடம் ஜனவரி 1ஆம் திகதி முதல் புதிதாகப் பதிவு செய்யப்படும் எந்த வாகனத்தினதும் நம்பர் பிளேட்டில் சிங்கள சிறி எழுத்துப் பொறிக்கப்படுவதில்லை.

இன்னும் சில நாட்களில் 'சிறிலங்காவிலும்' சிறி எடுக்கப்பட்டுவிடும் என்று எதிர்க்கட்சியினர் முணுமுணுத்த போதும் இலங்கை அரசு இதை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.


வடக்கிலும், கிழக்கிலும் அடிக்கடி தெற்கிலும் நம்பர் தகடுகள் அற்ற வாகனங்கள் ஓடித் திரிகிற இன்றைய நாட்களில் ஒரு எழுத்து மாற்றப்பட்டதில் என்ன புதுமை என்று யாராவது கேட்கக் கூடும். (சிங்கள 'சிறி' இருந்த இடத்தை ஒரு (–) அடையாளம் இப்போது பிடித்துக்கொண்டுள்ளது.

ஆனால் இந்த சிங்கள சிறியை இல்லாமல் செய்த போது அதைக்கொண்டுவந்தபோது நடைபெற்ற மறக்க முடியாத சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருவதால் அவ்வளவு இலகுவாக இதை எடுத்துவிட முடியவில்லை.

சிங்கள 'சிறி' கொண்டுவரப்பட்டபோது 32 வருடங்களுக்கு முன் அது சிங்கள இனஒடுக்குமுறையின் ஒரு குறியீடாகக் கருதப்பட்டு தமிழ் மக்களின் தீவிரமாக எதிர்க்கப்பட்டது.

எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய அன்றைய தமிழரசுக் கட்சி' தடுப்பு முகாம்' வாழ்க்கையுடன் அதை மௌனமாகக் கைவிட்டுவிட்டது.

www.tamilarangam.net



தொடர்ந்து இந்தப் பகுதியில் எழுதுகிறார்கள்.

பின்னுளில் இக் கட்சியினர் தங்களது வாகனங்களின் நம்பர் தகடுகளில் சிங்கள 'சிறி' க்குக் கீழ் (தமிழ் எழுத்து என்று நம் பியோ என்னவோ) ஸ்ரீ என்ற எழுத்தையும் எழுதித் திரிந்தார் கள். காலப்போக்கில் அவர்களு க்கும் ஸ்ரீ என்ற எழுத்து அலுத்து ப்போய் தனியான சிங்கள எழு த்துகளுடன் திரியத் தொடங்கின ர்கள்.

இப்போது இலங்கை அர சுக்கு சிங்கள சிறி அலுத்துவிட் டதோ என்னவோ அதுவும்அதை கைவிட்டுவிட்டது என்றுதான்நான் முதலில் நினைத்தேன்.

ஆனல் விசயம் அப்படிய ல்ல, த. வி. பு. களுக்கும், இல ங்கை அரசுக்கும் புதிதாகத் தோன்றியுள்ள 'காதலின்' பின் ஏற்பட்ட தொடர்ச்சியான பே ச்சுவார்த்தையின் பயனுக அர சும், 'நேர்மையும், கண்ணியமும்' மிக்க ஜனுதிபதி பிரேமதாசவும் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையின் ஒரு வெளிப்பாடா க இது நடந்துள்ளது என அறிந் தேன்.

நல்லதுதான். எந்த அடிப் படைப் பிரச்சினை காரணமாக தமிழ் ஈழம் தேவை என்ற நிலைக்கு தமிழ் மக்கள் வந்தா ர்களோ, அந்த அடிப்படைப்பிர ச்சினையைத் தீர்த்து வைக்க ஜனுதிபதி பிரேமதாச தயாரா கவிருப்பதாக விடுதலைப்புலிகள் கூறுகின்றனர்.

## பிரஜைகள்

அந்த அடிப்படைப் பிரச் சினை என்னவென்று இதுவரை அவர்கள் வெளிப்படையாகக் கூ றவில்லை. ஒருவேளை அவற்றில் ஒன்ருக இது இருக்கக்கூடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1956இலிருந்து இன்று வரை 'அரச கரும' மொழியாக இருந்துவரும் சிங்களம் (இதைத்தான் தனிச் சிங்களசட்டம் என்று நாம் அடிக்கடி கூட்டணியினர் கூறக் கேட்டிருக்கிறோம்.) அப்படியே இருக்க, தமிழ் இனம் ஒரு தேசிய இனமோ, அது ஒரு பாரம்பரிய பிரதேசத்தைக் கொண்டதோ அல்ல என்ற அடிப்படைகள் அப்படியே இருக்க, பௌத்த மதம் 'அரச மதமாக' இன்னமும் இருக்க, அவற்றின் குறியீடுகளில் ஒன்றான 'சிறி'யை மட்டும் அகற்றுவதன் மூலம் இலங்கையரசு புதிதாக எதையும் செய்துவிடவில்லை.

1950களில் சிங்களபௌத்த பேரினவாதத்தை நிறுவனமயப்படுத்துவதில் தீவிரமாகவிருந்த பேரினவாதிகள், இன்று அது ஒரு மாபெரும் ஆல விருட்சமாக நிறுவனமயப்படுத்தப்பட்டபின் அன்று 'சிறி' எழுத்துக்கு கொடுத்தளவு முக்கியத்துவத்தைக் – கொடுக்கவேண்டியதில்லையென்று அவநம்பிக்கைவாதியான நண்பர் ஒருவர் எனக்குச் சொன்னார்.

'கண்ணியமும் நேர்மையும் மிக்க' கனவானான பிரேமதாசவின் மீது இப்படி அவர் சந்தேகப்படுவதை அனுமதிக்கலாமா?

பகிரங்கக் கூட்டத்திற்கு சட்டம் இடமளிக்காவிட்டாலும், வாய்ப்புத் தந்தும், இலங்கையரசின் செலவில் அதன் சொந்த 'ஹெலி'யில் அரசியல் பேச்சுவார்த்தைகட்கும், பிறவுக்கும் பயணம் செல்ல வாய்ப்பளித்தும்



"என்னடா உன்ரை சிநேகிதன் தலை
பிய்ச்சுக்கொண்டு ஓடுறான். என்ன செ
தனி?"

"நான் ஒண்டும் செய்யேல. அரசியல் க
தைச்சுக்கொண்டிருந்தம். இலங்கையரசா
ங்கம் நல்லதோ, கெட்டதோவெண்டு
கேட்டான். கெட்டது எண்டு நான் சொ
ன்னன். அப்பேன் அந்த அரசாங்கத்தோ
ட பேச்சுவார்த்தையெண்டு கேட்டான்.
கண்ணியமும், நாணயமுமுள்ள ஜனாதிபதியில
நம்பிக்கை இருக்கிறபடியால் எண்டன்.
பேச்சுவார்த்தையில என்ன நன்மையெ
டு கேட்டான். ஆமியோட போர் நிறு
தம் எண்டு நான் சொன்னன். அப்பே
இன்னும் ஆயுதங்கள் எண்டு கேட்டான்.
மியோட சண்டை பிடிக்கத்தான் எண்ட
இவ்வளவுதான் கதைச்சனாங்கள். இருந்தா
ப்போல அவன் தலையைப் பிய்ச்சுக்கொ
ண்டு ஓடியிட்டான்.

– இன்னன்

www.tamilarangam.net

'துரோகக்' கும்பல்களை ஒழிப்பதற்கு ஆயுதங்களை வழங்கத் தயாராக இருந்தும் வருகிற ஒரு ஜனாதிபதியின் மீது எப்படி அவ நம்பிக்கைப்பட முடியும்?

இப்போது விடுதலைப்புலிகளை ஏற்றித் திரியும் அதே ஹெலிகள்தான் அன்று தமிழ்மக்கள் மீது பீப்பாக் குண்டுகளையுருட்டுபவர்களையும், ஷெல் அடிப்பவர்களையும் ஏற்றித் திரிந்தது என்பதும், வடக்கு, கிழக்கு மாகாணத்தின் உயர்ந்த சுவர்களையும், வீதிகளையும் தன் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தது என்பதையும் மறுக்கவில்லை

ஆனால் அப்போது இருந்தது ஜே. ஆர். அவர் அருகில் ஒரு 'பியோனாக' இருந்தவர் இந்த நேர்மையாளர். இப்போது இவரது ஆட்சியில் சந்தேகப்படுவதில் அர்த்தமில்லை.

ஆனால் அந்த அவநம்பிக்கைக்கார நண்பர் ஒரு கல்லுளிமங்கரைப்போல் தலையாட்டிக் கொண்டு சொல்கிறார்...

"இப்படித்தான் ராஜீவும் நேர்மையாக இருந்தார். அவரது வார்த்தைகளை நாம் முழுக்க முழுக்க நம்பலாம் என்று சொன்னோம். ஆனால் ராஜீவின் சமாதானப்படைதான் தமிழீழம் முழுவதையும் சுடுகாடாக்கியது. இப்போது பிரேமதாசவைப் பற்றிப் பேசுகிறோம்... ராஜீவின் விசயத்திலாவது மன்னிக்கலாம். முன்பின் தெரியாதவர். ஆனால் பிரேமதாச....?"

போகட்டும். இவர் கிடக்கிறார். நான் நினைக்கிறேன் தமிழீழம் தேவையில்லை. பிரேமதாச நல்லவர்தானே.. நேர்மையானவர்.. எந்த நிபந்தனையும் போடாமல் புலிகளுடன் பேசுகிறார்.. குறிப்பாக ஆயுதங்களைக் கேட்கவில்லை. இன்னும் 'குடுத்தாலும் குடுப்பாரே' ஒழிய கேக்கமாட்டார்.

இனி மாகாணசபையைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தினால் சரி. அதற்கு முன்பாக எல்லாத் துரோகிகளையும் இல்லாமல் செய்துவிட வேண்டும். அது லிபியாவுக்கு அழைத்துப் போக மறுத்தவர்கள் என்றாலும் சரி. இந்தியாவின் வால்பிடிகளாகவிருந்தாலும் சரி. அல்லது தேவையில்லாத விசர்க் கதை கதைக்கிற ஆட்களாக இருந்தாலும் சரி.

அதற்குப் பிறகு ஏன் தமிழீழம்?

துவக்கிருந்தால் போதும் தானே?

எதுவும் செய்யலாம்!!!

**********************

தற்போது பரவலாக வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளின் பொதுக் கூட்டங்கள்நடைபெற்று வருகின்றன.

இலங்கை அரசின் பாதுகாப்பமைச்சர் ர(ந)ஞ்சன் விஜேரத்ன சொல்லுவது போல

www.tamilarangam.net

'புதிதாக அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ள காடுகளிலிருந்து வந்தவர்கள்' என்பதாலோ என்னவோ அவர்களின் பொதுக்கூட்டங்கள் வேகமாக நடைபெற்று வருகின்றன. நாள் தப்பினும் தப்புமேயொழிய இப்பொதுக்கூட்டங்கள் தப்பாது என்றளவுக்கு அவை அதிகரித்துள்ளன.

'உலகத்திலுள்ள மொத்தம் 53 விடுதலை இயக்கங்களில் தலைசிறந்ததான'தாக அவர்களாலேயே கூறப்படும் இந்த விடுதலை இயக்கத்தின் பொதுக்கூட்டப் பேச்சுக்கள் மிகவும் தெளிவாகப் பல விசயங்களை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் ஒன்றுதான் த.வி.கூ. வினரை கொழும்பில் படுகொலை செய்தது.

இப்படி வெளிப்படையாக இதைக் கூறியிருப்பதை வரவேற்கத்தான் வேண்டும். கடந்த காலம் முழுவதும் தங்களுக்கே நியாயப்படுத்த முடியாதளவு சிக்கலான பல கொலைகளை அநேகமாக அனைத்து விடுதலைஇயக்கங்களும் செய்துவிட்டு மௌனம் சாதித்து வந்துள்ளன. (மௌனம் கலக நாஸ்தி !!)

இப்போது த.வி.கூ.வினரின் கொலையை ஏற்றுக்கொண்டிருப்பது வரவேற்க வேண்டியதே. இவ்வாறு ஒவ்வொரு இயக்கங்களும் சொல்லுமானால்....

ஆனால் இவ்வள்வு வெளிப்படையாகச் சொல்லுகிற அளவுக்கு தயாராகிவிட்ட த.வி.பு. அரசியல் கருத்துகள் தொடர்பாக மட்டும் இரட்டை வேடம் ஆடுகிறதா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை

பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை அரசு முழு இலங்கையிலும் தேசியக்கொடி (நமது அனுபவத்தில் சிங்களக் கொடி) யை ஏற்றுமாறு கோரியிருந்தது ஆனால் 'ஆயுதமேந்தியவர்களின்' தலையீட்டால் மட்டுநகரில் அது ஏற்றப்படவில்லை என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. அதை படித்தபோது எனக்கு உள்ளூர மகிழ்ச்சியாகவிருந்தது. ஏனென்றால் எனக்கு அரசியல் புத்தி தெரிந்த நாள்முதல் பெப்ரவரி 4 என்பது கரிநாளாகவும், கறுப்புக்கொடி என்னும் நாளாகவுமே நினைவிருக்கிறது.

இம்முறை மட்டும் தேசிய விடுதலைக்காகப் போராடி இவ்வளவு இழப்பின் பின்னும் வாளேந்திய சிங்கத்தினைக் கொண்ட சிங்களக்கொடியை ஏற்ற எமது விடுதலை இயக்கங்கள் தயாராகிவிடலாமா என்ற ஆதங்கம் இருந்தது.

அந்த ஆதங்கத்தை நீக்கும் விதத்தில் கொடி ஏற்ற அனுமதிக்கப்படாதது எனக்கு சந்தோசமளித்ததில் வியப்பில்லை அல்லவா?

த.வி.புவினர்தான் இதை செய்தார்கள் என்று பிறகு கேள்விப்பட்டேன்.

www.tamilarangam.net

ஆனால் மறுநாளே, இலங்கையரசுக்கும் எமக்கும் இடையிலான உறவுக்கு தார் பூசும் நோக்குடன் ரி.என்.ஏ.யினரே இதைச் செய்துள்ளனர் என த.வி.பு.வினர் மட்டக்களப்பிலிருந்து அறிக்கைவிட்டனர்.

எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

பிறகு மறுநாள் பத்திரிகையில் 'இதற்கு எவரையும் குற்றம் சொல்ல முடியாது' என்ற ரஞ்சன் விஜேரத்னவின் அறிக்கை வெளியாகியிருந்தது.

குழப்பம் தீர்ந்த பபாடில்லை.

த.வி.பு.வினருடன் தொடர்புள்ள நண்பர் ஒருவரிடம் சும்மா கேட்டு வைத்தேன்.

'இதுதான் ராஜ தந்திரம்' என்றார்.

சரிதான். எனக்கு இதுகூட விளங்கவில்லையே என்று அங்கலாய்த்துக்கொண்டேன்.

ஆனால் எனது நண்பர் இருக்கிறாரே, நான் முதல் சொன்ன அவநம்பிக்கைவாதியான எனது நண்பர், அவர் சொன்னார் 'இதைத்தான் சந்தர்ப்பவாதம் என்கிறது' என்று. முதலில் கூட்டணியும் இதைத்தான் தொடர்ச்சியாகச் செய்து வந்தார்கள். இப்போது இவர்கள் செய்கிறார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பவாதத் தவறுகளுக்கும் மக்கள் இரத்தத்தால் விலை கொடுக்க வேண்டும். இது முதலில் ராஜீவுடனான உறவில் நடந்தது. இப்போது இலங்கை அரசுடனான உறவில் நடக்கிறது...' என்று.

87 ஒக்ரோபர் மாதம் திடீரென எனக்கு ஞாபகம் வரவே நான் பயந்து போனேன். 'என்ன அப்பிடிச் சொல்கிறாய்? என்றேன்.

'உண்மைதான். மார்ச்சில் ஐ.பி.கே.எவ். போனபிறகு—தாங்கள் இலங்கை அரசுடன் சண்டை பிடிக்கப் போவதாகப் புலிகள் சொல்லித் திரிகிறார்கள் அவர்கள் சண்டை பிடித்தால் என்ன, பிடிக்காவிட்டால் என்ன இந்த நிலையிலிருந்து மீள மக்கள் ரத்தத்தால் விலை கொடுக்கத்தான் வேண்டும்...'

'எந்த நிலை?'

'இந்தியாவை நம்பலாம் என்று கூறி ஏமாற்றிய நிலையை மாற்றி அதை எதிரி என நிரூபிக்க எவ்வளவு இரத்தம் சிந்தினோமோ அதேபோல, நாப்பத்தைந்தாண்டுகளுக்கு மேலாகத் தெட்டத் தெளிவாக எதிரியாக இனங்கண்ட ஒருவரை நண்பராக காட்டியிருக்கிறோம். மக்களைத்—தடுமாறச் செய்திருக்கிறோம். அவன் எதிரிதான் என மீள நிரூபிக்க வேண்டிவரும். அப்ப தெரியும் நிலை என்னவென்று..'

'ஆனால் எல்.ரி.ரி.ஈ. சண்டை பிடிக்கப் போவதாகச் சொல்லவில்லையே?' என்றேன் நான். எனது அச்சம் இன்னமும் மாறவில்லை. ஷெல்லும், குண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரண ஓலமும் கண்ணில் தோன்றி மிரட்டின.

'இதுதான் ராஜதந்திரம் உனக்குத் தெரியாதா?'

ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை ராஜதந்திரம் ராஜாக்களுக்கு மட்டும்தான் புரியுமோ என்னவோ...?

********************

நான் முதலில் எழுதநினைத்தது வேறு. ஆனால் எழுத உட்கார்ந்தபோது முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தனிஈழம் பிரகடனம் செய்துவிட்டதான செய்தியுடன் பத்திரிகை வந்தது படித்துப் பார்த்தபோது என்ன செய்வதென்றே தெரியவில்லை.

'இவ்வளவு லேசான விசயம்தான் ஈழத்தைப் பிரகடனம் செய்வதென்றால் ஏன் இவ்வளவு நாட்களும் இவர்கள் இதைச் செய்யவில்லையென்று வியப்பாக இருந்தது.

ஆனால் தாங்கள் முன்வைத்த 19 பிரேரணைகளையும் ஒப்புக்கொண்டால் அதைத் தாம் கைவிடத் தயாராக இருப்பதாகவும் அவர் சொல்லியிருப்பதை பார்த்தவுடன் எனக்கு விசயம் புரிந்துவிட்டது.

வரதர் சும்மா ஒருபகிடி விடுவோமா என்று யோசித்திருக்கிறார் அவ்வளவுதான் என்று.

1977 தேர்தலில் அமிர்தலிங்கம் ஆகியோர் தேர்தல் முடிந்ததும் 'தேசிய சபை' — தொடங்கப்படும், தமிழீழம் பிரகடனப்படுத்தப்படும் என்றுசொன்னார்கள்.

பிறகும் இப்படிப் பல சந்தர்ப்பங்கள் வந்தன.

இப்போது வரதர்.

தமிழ் மக்களுடனும், தமிழீழத்துடனும் பகிடி விடுவதில் வரதரும் சளைத்தவரல்ல என்றுகாட்டியிருக்கிறார்.



பெண்ணின் தகப்பன்:
"மாப்பிளை ஏன் சரியா வெக்கப்படுறார்?"

தரகர்:
"அது அவற்றை சுபாவமேயொழிய ரீநட்றியில சேட்டைவிட்டு உங்கடை மகளிட்டை செருப்பால அடிவேண்டினவர் எண்டதைச் சொல்லவேமாட்டன்"

— இன்னன்ஞ

www.tamilarangam.net

இலங்கையின் மிகப் பெரிய மாகாணசபையில் தனக்கு இருக்கக் கதிரை இல்லையென்று அவர் பேசித் திரிகையில் இப்படிச் செய்யவில்லை.

இலங்கை அரசாங்கம் அவரைப் பகிரங்கமாக பயங்கரவாத தனிப்பட்ட இராணுவத்தை வைத்திருக்கிறார் என்றுகூறியும், அதை அழிக்க த.வி.பு.க்கு உதவிசெய்தும் வந்தபோது இந்தப் பிரகடனத்தை அவர் செய்யவில்லை.

வடக்கு முழுவதையும், மட்டக்களப்பு பூராவையும் இழந்து திருகோணமலையில் நிற்கும்போது இந்த முடிவை அவர் எடுத்திருக்கிறார்.

ஐ.பி.கே.எவ். வெளியேறிவிடும் என்ற நிலையில் இது செய்யப்பட்டிருக்கிறது.

அந்நிய இராணுவமான இலங்கை இராணுவம் சுதந்திர ஈழத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று சொல்கிறார்.

ஐ.பி.கே.எவ் அந்நிய இராணுவம் இல்லைப்போலும்.

இணுவிலில், கோவில் - வாசல் அகதி முகாமில் ஐ.பி.கே.எவ் ஷெல் அடித்து அகதிகள் செத்துப்போன விசயம் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டு நான் இருந்தபோது இவர் சண்டேரைம்ஸில் கொடுத்திருந்த - பேட்டியைக் காண நேர்ந்தது.

'நாம் இப்போதும் ஐ.பி.கே.எவ்.வினரே தமிழ் மக்களின் உண்மையான பாதுகாவலர் என்று நம்புகிறோம்' என்று அவர் சொல்லியிருந்தார்.

ஒருவேளை ஐ.பி.கே.எவ்வை 'பாதுகாவலர்' என்ற முறையில் வெளியேறக் கோரவில்லைப் போலும்.

ஐ.பி.கே.எவ்.வும் வெளியேறிய பின்னர் தன்னைப் பாதுகாக்க அவர் என்ன செய்யப் போகிறார் என்பது அவருக்கே வெளிச்சம். (பிந்திய செய்தி: திருகோணமலையிலிருந்து தனி விமானத்தில் பறந்த வரதர் இந்தியாவுக்கு அல்லது மாலைதீவுக்குச் சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.)

இந்த நிலையில் இப்படி ஒரு பிரகடனம் செய்திருக்கிறார் இதைச் 'சீரியஸாக' எடுக்க முடியுமா?

எடுக்காமல் விட்டு விடுவோம்.

தமிழ் மக்களோடும், தமிழீழத்தோடும் பகிடிவிட அவருக்கு உரிமை இல்லையா என்ன? அதை நாம் சீரியஸாக எடுக்கலாமா?

இம்முறை எனது அந்த அவநம்பிக்கைவாதி நண்பரைக் - காணவில்லை. கண்டால் இதுபற்றி என்ன சொல்லுவார்?

பரவாயில்லை..உனக்கும் விசயம் பிடிபடுகிறது என்று?

தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌன அஞ்சலி

உனக்குத் தெரியுமா
நண்பனே.
இப்போதெல்லாம்
நான் கவிதை எழுதுவதில்லை.

பேனையை மூடி இறப்பில் செருகினேன்.
பேப்பரைச் சுருட்டி அடுப்பில் செருகினேன்.
கண்களை மூடி,
காதைப் பொத்தி,
வாயையும் மூடி வைத்திருந்தேன்.

மூச்சுக் காற்றின்
வீச்சுக் கேட்டால்
வேலிக் கதியால் முறிபடும் என்று
மூச்சை நிறுத்தினேன்.

செத்துப் போனதாய்ப்
புதைத்து விட்டனர்.

சவப் பெட்டிக்குள் படுத்தபடியே
எழுத நினைத்தேன்.
வார்னிஸ் பூசிய
பலகையின் மணத்தையும்,
கம்பி ஆணியின் உறுத்தும் முனையையும்
கப்பி இருக்கும் இருளையும் பற்றி
கவிதை எழுதிக் களைத்துப் போனேன்.

உனக்குத் தெரியுமா?
இப்போதெல்லாம்
நான் கவிதை எழுதுவதில்லை.

சிட்டு

www.tamilarangam.net

# இந்திய அரசின் பொம்மைகள்.

இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு அன்றுதொட்டு பலவிதமாகத் தலையிட்டு வருகிறது. மறைமுகமாக றோ, கியூ போன்ற உளவுப்படைகள் மூலமும், நேரடியாகத் தமிழ்நாட்டு அரசு, இராணுவம் மூலமும் தனது நலன்களைப் பேண இந்திய அரசு தொடர்ச்சியாகவே முயன்று வருகின்றது.

இந்தியாவில் 'தங்கியிருக்கும்' இயக்கங்களுக்கு தேவையான பணம், ஆயுதங்கள், 'தலைவர்களுக்கான' வாழ்க்கை வசதிகள் போன்றவற்றை வழங்கிவருவதன் மூலமும், காலத்துக்குக் காலம் தங்கள் அரசியல் இலாபங்களுக்காக 'கோசங்கள்' எழுப்பி இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளின் தாத்பரியத்தைக் குறைத்தும், மிகைப்படுத்தியும் போராட்டத்தை மழுங்கடித்து வருவதன் மூலமும் மாறி மாறி ஆட்சியைப் 'பிடிக்கும்' தமிழ்நாட்டு அரசுகள் மத்திய அரசுக்குச் சேவகம் செய்வதில் எப்போதும் பின்நின்றதில்லை.

இந்த வரிசையில் இப்போது மத்திய அரசின் 'தொண்டர்' பொறுப்பை ஏற்றிருக்கும் கருணாநிதியும் தன் பங்குக்கு குத்துக்கரணங்கள் அடித்துவருகிறார். இது அவர் புதிதாகச் செய்யும் ஒன்றல்ல.

எம்.ஜி.ஆர் புலிகளை வளர்க்கும்போது றெலோவைத்தான் வளர்த்தும், றெலோவினரைப் புலிகள் படுகொலை செய்தபோது புலிகளைக் கண்டித்தும், எம்.ஜி.ஆர் இறந்தபின் புலிகள் தன்னை நாடியபோது அவர்களை 'ஏற்றும்' தனது அரசியலை வளர்த்துக் கொண்டிருப்பதுடன் இந்திய ஆளும் வர்க்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றிப் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருபவர்தான் இந்தக் கருணாநிதி.

www.tamilarangam.net

எதிர்க்கட்சியாக இருந்தபோது "இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பித் தமிழர்களைப் பாதுகாக்காவிட்டால் தீக்குளிப்போம்(!)"என்று முழங்கியவர் ஆட்சியைக் கைப்பற்றியதும் "இந்திய இராணுவம் இலங்கையில் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைகள் பற்றியும் நான் எதுவும் சொல்வதிற்கில்லை" என்று மத்திய அரசின் 'நல்லபிள்ளை'யானார்.

"மாகாணசபைக்கு உரிய அதிகாரங்களை இந்தியஅரசு பெற்றுக்கொடுக்க வேண்டும்"என்றவர் பின்னர்"மாகாணசபை கலைக்கப்பட்டு புலிகளிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்" என்றார்.

இவற்றின் உச்சக்கட்டமாக "இனிமேல் இலங்கைப்போராளிகளுக்குத் தமிழ் நாட்டில் இடமில்லை. இலங்கையிலிருந்து இப்போது தப்பி வருபவர்கள் துரோகப்படையினர்தான். அகதிகளல்ல அவர்களுக்கும் தமிழ் நாட்டில் இடமில்லை"என்று அறிவித்திருக்கிறார்.

புலிகளின் பழிவாங்கலுக்குத் தப்பி, நடுக்கடலில் இலங்கை விமானப்படையினதும், புலிகளினதும் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து தமிழ் நாட்டுக்குத் தப்பிவந்த அகதிகள் கருணாநிதி ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்து ஒரிஸ்ஸா மாநிலத்தில் தஞ்சம் கோரினார்கள். எந்த வசதிகளுமற்று, பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தங்கவைக்கப்பட்டுள்ள இவர்களை மத்திய அரசின் ஆணையின்பேரில் அந்தமான் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப் போவதாக ஒரிஸ்ஸா மாநில அரசு கூறியுள்ளது.

தமிழ்நாட்டு அரசுக்கு மற்ற மாநில அரசுகள் எந்த விதத்திலும் சளைத்தவையல்ல என்பதைவிட, எல்லா மாநிலங்களும் மத்திய அரசுக்குத் துதி பாடிக்கொண்டிருப்பதையே இந் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டியுள்ளன.

கருணாநிதியின் கூற்றை அப்படியே ஏற்றுக்கொண்ட இலங்கையிலிருந்து வெளியாகும் அநேகமான பத்திரிகைகளும் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றவர்கள் துரோகப்படையினரேயொழிய அகதிகள் அல்ல எனத் தமது 'மனிதாபிமானத்தை' வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் தற்போது தங்கவைக்கப்பட்டவர்கள் முன்பு இந்திய இராணுவத்தின் கூட்டுடன் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளையும், மிலேச்சத்தனமான கொலைகளையும் மேற்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ, புளொட் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்பது அனைவரும் தெரிந்துகொண்ட உண்மையாகும்.

www.tamilarangam.net

ஆனால் ஆயுதமேந்தி அட்டகாசம் புரிந்த இக் கும்பல்களுடன் இவர்களின் தாய், தந்தை, பிள்ளைகள், உறவினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரும் புலிகளின் பழிவாங்கலுக்கு அஞ்சி தப்பிச் சென்றிருக்கிறார்கள் என்பது மறைக்கப்பட்டுள்ள உண்மையாகும்.

இந்திய இராணுவத்துடன் இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ் குழுக்கள் எல்.ரி.ரி.ஈ.யின் குடும்பத்தவர்களையும், ஆதரவாளர்களையும் தேடியழித்தபோது எதிர்த்தெழும்பிய குரல்கள் இப்போது அதேமாதிரியான பழிவாங்கல்களிலிருந்து உயிர் தப்பிய மேற்படி குழுக்களின் குடும்பத்தவர்கள், ஆதரவாளர்கள் விலங்குகளைப்போல் அடைத்துவைக்கப்பட்டிருப்பதையும், கண்காணாத இடங்களுக்கு அனுப்பப்பட்டு துன்புறுத்தலுக்கு உள்ளாகுவதையும் எதிர்த்துக் குரல் கொடுக்காததுடன், இந்திய அரசின் மனிதாபிமான மீறல் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மௌனமாகிவிட்டன.

இந்திய இராணுவத்துடன் தப்பிச் சென்ற ஆயுதபாணிக் குழுக்கள் இலங்கை மீதான இந்திய அரசின் ஆதிக்க நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் இரகசிய ஆயுதப் பயிற்சி பெறக்கூடும் என்பதையும், ஆயுதங்களையும், மேலதிக ஆட்களையும் உள்வாங்கி மீண்டும் இலங்கைக்குள் இந்திய அரசின் நலன்களுக்காகப் பிரவேசிக்கக்கூடும் என்பதையும் தெளிவுபடுத்தும் அதேநேரம், இக் கும்பல்களின் குடும்பத்தவர்கள் மீதும், இக் கும்பல்களுக்கு கட்டாயத்தின் பேரிலோ அல்லது அறியாமலோ ஆதரவளித்த ஆதரவாளர்கள் மீதும் இந்திய அரசோ, அதன் சேவகர்களான மாநில அரசுகளோ, வேறு சக்திகளோ மனிதாபிமான மீறல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அனைவராலும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

"இந்த அரசாங்கம் உண்மையிலேயே கெட்டிக்கார அரசாங்கம்தான்."

"ஏன்?"

"சனங்களிட்டயே காசைப் பறிச்சு, அந்தக் காசையே எங்களுக்குச் சம்பளமாய் தந்து, சனங்களைக் கொடுமைப்படுத்தச் சொல்லுறதெண்டால் பாரன்"

– இன்னன்று



www.tamilarangam.net

# பெண்கள் சந்திப்பு

மேற்கு ஜேர்மெனியில்உள்ள தமிழ்ப் பெண்களின் சந்திப்பு நிகழ்ச்சியொன்று 17.03.90 இல் கேர்ன நகரில் நடைபெற்றது. சுமார் இருபதிற்கும் மேற்பட்ட பெண்கள் இச் சந்திப்பில் பங்குபற்றினர்.

பத்து மணியளவில் சுயஅறிமுகத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

ஸ்ருட்காட் மகளிர் சங்கம் சார்பில் மங்கையற்கரசி தங்கள் அமைப்பைப் பற்றிக் கூறினார். ஆரம்பத்தில் 25 ஆக இருந்த இவ்வமைப்பின் உறுப்பினர் தொகை தற்போது 4ஆக குறைந்துள்ளதாகவும், இம் மகளிர் அமைப்பைப் பெண்களும், ஆண்களும் குறுகிய கண்ணோட்டத்துடனேயே பார்ப்பதாகவும் கூறினார். மேலும் இவ்வமைப்பைத் - தடைப்படுத்துவதற்காக, பிள்ளை இல்லாதவர்களும், கணவனுக்கு அடங்காமல் திரிபவர்களுமே இவ்வமைப்பில் அங்கம் வகிக்கிறார்களென்றும், இவ்வமைப்புக்கு வேறு அநாகரிகமான பெயர்கள் சூட்டியும் கொச்சைப்படுத்தி வருகிறார்கள் எனவும் தாம் எதிர்கொள்ளும் இன்னல்களை மங்கையற்கரசி விபரித்தார்.

பிலபீல்ட் நகரத்திலிருந்து வந்த பெண்கள் குழுவின் சார்பாகப் பேசிய கௌரி தாங்கள் இன்னும் ஒரு ஒழுங்கான அமைப்பு வடிவமாகவில்லை என்றும், கூடிய விரைவில் இதைநடைமுறைப்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

ஸ்ருட்காட் நகரில் நடைபெறுவதுபோல்தான் இங்கும் நடைபெறுகிறது. இங்கு உருவாக்கப்பட்ட நூல்நிலையத்திற்குக் - கூட பலர் வருவதில்லை. பெண்கள் நடத்துகிறார்கள் என்பது அவர்கள் சொல்லும் காரணமாகும். பெண்களை விட ஆண்கள் பெரியவர்கள், எனவே பெண்களால் நடத்தப்படும் எந்த ஒன்றுக்கும் ஏன் தாங்கள் போக வேண்டும் என்று கருதும் ஆண்கள் தங்கள் வீடுகளிலிருக்கும் பெண்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றுக்கும் அனுமதிப்பதில்லை. அவர்கள்தான் வேறு வேலையில்லாமல் இப்படித் திரிகிறார்கள். நீங்கள் வீட்டில் இருந்து ஒழுங்காக வேலைகளைச் செய்யுங்கள் என்று அந்தப் பெண்கள் வீட்டுக்குள் அடைத்து வைக்கப்படுகிறார்கள். இப்படி கேர்ண பெண்கள் வட்டத்தின் சார்பாக கருத்துத் தெரிவித்த புவனா குறிப்பிட்டார்.

தொடர்ந்த "எமது நகரத்திலும், அடுத்த நகரத்திலும் பெண்களின் முயற்சி" என்ற தலைப்பில் பல தோழிகள் தங்கள் இடங்களில் நடைபெறும் முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். தையல் வகுப்பு, ஜேர்மன் மொழி வகுப்புகள் பற்றியே அதிகம் கூறப்பட்டது.

---

சு. சுகந்தி.

---

இதனையடுத்து "பெரும்பாலான பெண்கள் இத்தகைய அமைப்புகளில் அல்லது முயற்சிகளில் ஈடுபடத் தயங்குவதுஏன்" என்ற விவாதம் இடம்பெற்றது. கணவன், பிள்ளைகளுக்கான 'பணிவிடைகளை' விட்டுவிட்டு வருவதும், பிள்ளைகளைத் தனியே விட்டுச் செல்வதும் சிரமமானவை என்று கூறினார்கள். தங்களைக் கலந்துகொள்ளச் சொல்லித் தங்கள் கணவர்மார் வற்புறுத்துவதாகவும், ஆனால் தங்களால்தான் பங்குபற்ற வருவது கஷ்டமாக உள்ளதென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

மதிய போசன இடைவேளையின் பின், இலங்கையிலிருந்து வெளிவரும் 'திசை' என்ற பத்திரிகையின் 23.02.90 ஆம் திகதிப் பதிப்பில் பிரசுரமாகியிருந்த யசோதா பத்மநாதனின் 'நாளை பெண்களின் அவலம்' என்ற கட்டுரை வாசிக்கப்பட்டு, அது குறித்த கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. ஒரு ஆணுக்கு 8 பெண்கள் என்ற விதம் உருவாகியுள்ளமை பற்றி முக்கியமாக கணக்கில் எடுக்கப்பட்டது.

இதன்பின் வெளிநாடுகளில் வாழும் பெண்களின் இன்னல்கள் பற்றியும் கருத்துகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. மொழிப் பிரச்சினை, தனிமையில் வாழும் சூழ்நிலை என்பன பற்றி பலர் விபரித்தார்கள்.

பிரான்ஸிலிருந்து வெளியாகும் 'பள்ளம்' என்ற சஞ்சிகையின் தை/மாசி இதழில் வெளியான 'ஜேர்மெனியில் மகளிர் விடுதலையை நோக்கி..' என்ற சுகனின் கட்டுரை விமர்சிக்கப்பட்டது. இக் கட்டுரையில் பெயர் குறிப்பிடப்பட்ட தோழியர், இக் கட்டுரை இல்லாதவற்றையெல்லாம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளதாகவும், தங்களை விளம்பரப்படுத்துவதாக உள்ளதாகவும்


(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கனவை மிதித்தவள்

— பார்த்திபன்

தரிப்பில் இறங்கிக்கொண்டார்கள் மீனுவும், சுதாவும். புழுக்கத்திலிருந்தும், நெரிசலிலிருந்தும் விடுபட்டு, இப்போது காற்றுசில்! பச்சையாகக் காலே. பிறெஷ் சூரியன்.

அமைப்பாக இல்லாமல் கல்லுகள் துருத்திக் கொண்டிருந்த பாதை விளிம்பில் இருவரும் நடக்க ஆரம்பித்தார்கள். பழக்கமான வழி. எங்கே கல்லு குத்தக் கூடும், எங்கே தடுக்கி விழுத்தக் கூடும் என்பதெல்லாம் நல்ல மனனம்.

"சந்தி கடைக்குப் போய் பாண் வேண்டிக் கொண்டு போவம். காலமை ஒண்டும் சாப்பிடேல. பசி வயித்தைக் கிள்ளுது" சுதா வயிற்றைத் தட்டிக் காட்டிச் சொன்னாள்.

"காருத்தல் வண்டும்அரைருத்தல் பாணுமெண்டும் கேள்" மீனு சொல்ல, சிரித்துக் கொண்டார்கள்.

பல பகுதிகளில் நிலேமை வழமைக்குத் திரும்பியுள்ளதென்று பரவலாக கதை அடிபட்டது.

இ.போ.ச.கள் மறுபடியும் புகை கக்கி, உறுமிக் கொண்டிருந்தன. காக்கி உடைகளேயும், கவச வாகனங்களேயும் — காணவில்லே. (வராமலா போகப் போகின்றன என்று மீனு நினேத்துக் கொண்டாள்.)

இயக்க நோட்டிசுகளிலும் இப்படியான வேறு சமாச்சாரங்களிலும் மட்டும் பாவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் மீன் வாங்கச் சந்தைக்கென்றும்

www.tamilarangam.net



"என்ன சோர்ந்து போய் வாறுய் .வேலைக்கு உப்பிடியே வாறது?"

"உங்களுக்கென்ன சொல்லுவியள் . எங்கட கஸ்ரம் எங்களுக்கெல்லோ தெரியும் ஒருக்கா சொல்லுறாங்கள் வேலைக்குப் போறது சுடுவம் எண்டு. பிறகு சொல்லுறாங்கள் வேலைக்குப் போகாட்டி தெரியும் அலுவலெண்டு. சம்பளத்தை அப்பிடியே தாறியோ இல்லையோ எண்டு இனிவெருட்டுவாங்களோ எண்டு பயந்து சாகவேண்டியிருக்கு"

— ராசன்

மா வாங்க சங்கத்துக்கெண்டும் மகனை அல்லது மகளைப் பார்க்க பெரியாஸ்பத்திரிக்கெண்டும் பாதைகளிலும், பஸ்களிலும்.

சந்தியை அண்மிக்கும்போதே றெக்கோடிங் பாரிலிருந்து சத்தம் இடித்தது. "தென்பாண்டி சீமையிலே, தேரோடும்... "

"வழமை திரும்பித்தானிருக்கு" என்ருள் மீனு திடீரென்று.

"ஏன்?"

"வழமையெண்டா என்ன முந்தின அதே நிலைமை வாறது தானே"

"அப்பிடியெண்டா...?"

"றெக்கோடிங் பாறில பாட்டு. கடையளில அரு விலயில சாமான். ரேட்டில எச்சில் வடிக்கிற பெடியள். பஸ் ஓடுது. படம் ஓடுது..."

"இதே வழமை?"

"இதுதான் வழமையாம்"

"யாமோ?"

"ஆரோதான். எங்களைப் பற்றியே நாங்கள் இன்னும் வடிவாய் கதைக்கேலயே. ஆரோதானே கதைக்கினம். எழுதியினம் முடிவெடுக்கினம். வேற நாடுகளிலயும், எங்கட நாட்டோடை பிணைக்கப்படாத ஆக்களிலயும்— தங்கியிருக்கிற அளவுக்கு ஒருத்தரும் இன்னும் சனங்களில தங்கியிருக்கேலயே. ஒப்பந்தங்கள் — செய்யிறதிலயிருந்து காசு வேண்டுறவரைக்கும் எல்லாம் ஆற்றையோ இஷ்டப்படி தான நடக்குது"

கடைக்கு வந்தார்கள். கறுப்பாகிக் கொண்டிருந்த கதலி இதரைகள் தூக்குப் போட்டிருந்தன. கல்லாச் சம்பிரதாயப்

www.tamilarangam.net

படி முன்னால், மேசையில் இனிப் புப் போத்தல்களும், பின்னால் கலர்ச் சோடாக்களும். உள்ளே யிருந்து ரீ குடித்தவர்களில் யா ரோ பலமாக இருமிக் கொண் டிருந்தார்கள்.

"அரை றாத்தல் பாணும் ரண்டு பழமும்"

கண்ணாடி அலுமாரிக்குள்ளே சிறைப்பட்டிருந்த முழுப் பாணை எடுத்துப் பாதியாக வெட்டிஒரு பாதியை மறுபடி அடைத்து மற் றதை வீரகேசரியில் சுற்றிக்குடு த்தபின், தலைமறைவாயிருந்த ப ழங்களையும் பிடுங்கிக் குடுத் தார்.

காசை எண்ணிக் குடுத்து, மிச்சத்தைப் போட்டுக் கொண் டு இருவரும் மறுபடி தங்கள் திசைக்கு நடந்தார்கள். றெக் கோடிங் பாறில் பாட்டு மாறி யிருந்தது.

"அங்க பார்" மீனா கை யைக் காட்ட, சுதா பார்த் தாள்.

வரிகளுள்ள உடுப்பு, கறுப் புச் சப்பாத்து, தொப்பிகளுடன் இரண்டு மகளிர் கைகளில் துப் பாக்கிகளுடன் போய் கொண்டி ருந்தார்கள். அந்த இடத்தில் பலர் விலத்திப் போவது தெரி ந்தது.

மீனாவும், சுதாவும் ஒரு வரையொருவர் பார்த்துக்கொ ண்டார்கள்.

"நிலமையளில மாற்றம் இருக்கத்தான் செய்யுது. ஆனா எப்பிடியானதெண்டுதான் சரியா விளங்குதில்ல..."

"பெரிசா இல்ல. ஒரே பந்து. அதே ஆக்கள். அதே அம் பியர்மார்தான். பந்து ஒவ்வொ ரு கன்னைக்கும் மாறிக் கொண் டிருக்கிறதுதான் மாற்றமாய்த்-தெரியுது"

"நீ என்னடி! ஒரு சொல் லுக்கூடி ஒழுங்காய் கதைக்கிறாயி ல்லை. என்னத்தைச் சொன்னாலும் ஒரு விளக்கம். ஒரு காரணம். ஒரு ஊகம். நீ எப்ப வழமைக்கு திரும்புவாய்?"

மீனா புன்னகைத்தாள்.

வேலைத்தளத்தில் வேலை ஆரம்பங்கள் நடந்து கொண்டிரு ந்தன. உடுப்பு மாற்றிப் போடு வதிலிருந்து தங்கள் இடங்களில் உட்கார/நிற்கும் வரை எல்லா ம் இயந்திரத்தனமாயிருந்தன.

"எங்க விடியக் காலத் தாலயே உலாத்திப் போட்டு வாறியள்?" லதா விசாரித் தாள்.

"சாப்பாட்டுப் பிரச் சினை"

தொழில் ஆரம்பித்து விட் டது. இனி அவர்கள் கடிகாரங்க ள்(இருந்தால்) தாமதமாகவே ஓடும். புழுங்கும். களைக்கும்.

இராணுவ ரீதியில் அல் லாத காக்கி உடையணிந்திருந்த ஒருவன் ஏணியில் ஏறி நின்று சுவ ருக்குள் புதைத்து வைக்கப்பட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்த வயர் புதையல்களைக் கிளறி எதற்கோ இணைப்புக்கொடுப்பதில் மூழ்கிப் போயிருந்தான்.

"சரஸ்வதியின்ரை விசயம் என்ன மாதிரி?" ஆரம்ப மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அன்றைய சம்பாஷணைகள் ஆரம்பமாகின.

"எல்லாம் சரி வந்த-மாதிரித்தான். ஆள் வாற கிழமைமட்டில பறக்குமெண்டு நிக்கிறன்" இது சரஸ்வதியின் நெருங்கிய தோழியின் தகவல்.

"வர வர ஒவ்வொருத்தராய் எங்களை விட்டுக் கழண்டு கொண்டே போகினம். எத்தினை பேர் மிஞ்சி இதுக்கயே கிடந்து சாகப் போகிறோமோ?" என்பதைத் தொடர்ந்து ஏக்கமான பெருமூச்சு.

"சமநிலை இல்லாமபோனதும் ஒரு காரணந்தான். பழையான நிலைமையள் இருந்தா இப்பிடியான சில விளைவுகள் இருக்கத்தான் செய்யும்" என்று லதா சொல்ல, காலையில் தான் பாதையில் பார்த்த ஆயுத பாணி மகளிரை மீளு நினைத்துக் கொண்டாள்.

"வெளிநாட்டுக்குப் போனதுகளாவது சந்தோசமாயிருக்குதுகளோவெண்டு பாத்தால் அதுகுமில்லை"

"ஏனும்?"

"புருசன்காறன் அங்க ஏற்கெனவே அந்தநாட்டுக்காறியைக் கட்டியிருப்பானாம். இல்லாட்டி சீதனம் பத்தாது. வீட்டில கேட்டு இன்னும் வேண்டித் " தா எண்டு கொடுமையாம். வேறவேற விசயங்கள் எல்லாம் நடக்குதாம்"

"எங்காலயடி உதுகள் உனக்குத் தெரியும்..?"

"ஒரு வருசத்துக்கு முந்தி எங்களோட வேலை செய்த மதிவதனி கலியாணம் பேசி கனடாவுக்குப் போனவள் எல்லே. அவள்தான் கடிதத்தில விபரமா எல்லாம் எழுதியிருக்கிறாள்"

"எந்த நாட்டுக்குப்போனாலும் தப்பேலாதெண்ணிறாய்"

"எங்கட விடுதலை எங்களிட்டதானேயொழிய நாடுகளிட்டை இல்லை" என்றாள் லதா.

ஒரு மாதிரி இணைப்புக் கொடுத்துவிட்டு, முடித்துக் கொண்டு இறங்கிய காக்கிச் சட்டைக்காரன் ஏணியையும் தூக்கிக் - கொண்டு போனான். அரசாங்கம் தரும் சம்பளம். மாதம் முடியத்தான் வரும். குடும்பத்தைச் ச-மாளிக்கப் பழகியிருப்பான்.

மத்தியானச் சாப்பாட்டின்போது "வேலை முடிஞ்சு வீட்டை போகேக்க சரஸ்வதியிட்ட போட்டு போவமே. இனி எப்ப சந்திக்கிறோமோ தெரியாது " சுதா கேட்டாள்.

"அதுக்கென்ன. அம்மாட்ட சொல்லிப்போட்டு வரேல. சுண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்காமப் போவம்"

"நானும் வாறன்" லதா

மறுபடி வேலை ஆரம்பித்தபோது திரும்பவும் கலியாணப் பேச்சுகளே. மீனு சலித்திருந்தாள். 'பழத்தைப் பிசையிறதும், போத்தல்ல அடைக்கிறதும், லேபிள் ஒட்டுறதும், பழத்தைப் பிசையிறதும்... இதைவிட வேற ஒண்டுமே இல்லையா..?

வேற என்ன செய்யலாம் .....?!

குறைந்தபட்ச சனநாயகம் துளித்தாலாவது ஏதாவது செய்யலாம். அமைதி, அமைதியெண்டு சொல்லிக்கொண்டே கொலைத் தொழிலைச் சுமுகமாய் செய்து கொண்டிருக்கேக்க... என்னத்தைச் செய்யிறது?

அங்கால அரசாங்கம் குண்டுகளை வைச்சு சனத்தை உயிரோட கொளுத்துது. இங்கால மக்கள் எங்கட பக்கம் எண்டு சொல்லிக்கொண்டே மக்களை புனிதமாய் டம்ப் பண்ணிறது நடந்துகொண்டிருக்கு.

ஆரோட எதைக் கதைக்கிறது? எதைச் செய்யிறது..? ஆரை நோகிறது...?

மீனு யோசனைகளில் மிதந்துகொண்டே மற்றவர்களையும் அவதானித்தாள். அவர்கள் இப்போது வேறு யாரோக்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

கதைப்பதைக் கூட இன்னதுதான் கதைக்கலாம் எண்டு துப்பாக்கிச் சட்டங்கள் இருக்கையில்... பாவம் அவர்களை ஏன் நோகவேணும்?!

தனக்குச் சிலவேளை பைத்தியம் பிடித்துவிடுமோ என்று மீனுவுக்குப் பயமாகவிருந்தது. இந்தப் பயம் அடிக்கடி வந்து போகும்.

வேலை முடிந்து லதா, சுதா, மீனு மூவருமாக சரஸ்வதி வீட்டுக்குப் போனார்கள். சந்தியைத் தாண்டிப் போகும்போது கம்பம் நட்டு, கொடியை ஏற்றி கட்டுவது தெரிந்தது. சுற்றுச்சுவர்களில் புதிய போஸ்ரர்கள் ஈரப் பசையுடன் பளிச்.

ரியூட்டரிக் கொட்டிலுக்குள் பலர் கொப்பிகளுடனும், சைக்கிள்களுடனும் போனார்கள். ஆலயமணியொன்று பூசை றெடியென்றது. 'நாயகன்' இரவுக் காட்சிக்காக ஒரு கூட்டம் பஸ் ஏறியது.

"எங்கடை விடுதலை எங்களிட்டதான் எண்டு அப்போதை சொன்னனியெல்லே. எதைக் குறிப்பிட்டு அப்பிடிச் சொன்னனி ? பொம்பிளையளின்ரை விடுதலையையோ இல்லாட்டிப் பொதுவாய் எல்லாச் சனத்தின்ரையும் பிரச்சனையையுமோ?" மீனு கேட்டாள்.

"பொம்பிளையளும் சனங்கள்தான். (தூண்டில் நமது விமர்சனக்குழு கவனிக்க!) ஆணு ஒடுக்கப்படுற ஒரு சமூகத்திலேயே, அந்த சமூக அமைப்புகளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லேயே பொம்பிளையள் இன்னும் ஒடுக்கப்படுயினம். அதால பொம்பிளையள் அடிமைப்படுத்தப்படுற பிரச்சினையைத் தனிய எடுத்துப் பாக்க வேண்டியிருக்கு. அதிலகூட கன சிக்கலுகள்ள..."

"என்னெண்டு சொல்லன்"

"பெண்ணடிமைத்தனம் எண்டவுடன உனக்கு எதெது தெரியுது? டக்கெண்டு சொல்லு பாப்பம்"

"சீதனம், வீட்டு வேலையெல்லாம் பொம்பிளையளின்ரை தலையில, பழம் பிசையிற இல்லாட்டி சட்டை தைக்கிற வேலை தான் பொம்பிளையளுக்கு, அதுகும் கஞ்ச சம்பளத்தோட.... ..வேற... கற்பழிப்பு, கலியாணத்தில கூடி சுதந்திரமில்லாதது.."

"வேற?"

"வேற!"

"உதென்ன பள்ளிக்குடமே நடத்திறியள். அவ கேள்வி. இவ மறுமொழி. ஏன் கேள்வியையும் நீயே கேட்டு, நாலு விடையையும் நீயே சொல்லன். நாங்கள் ஒண்டுக்குப் புள்ளடி போடுறம். வேலைக் களையில மனிசர் இருக்கினம். இவையென்னெண்டா.." சுதாவுக்கு உண்மையில் தலையிடித்துக் கொண்டிருந்தது.

"அதுகும் சரிதான்" லதா சொல்ல, மீரா வேறுவிதமாகச் சிந்தித்தாள். 'ஏன் சுதா நெடுக இப்பிடிச் சொல்லுறாள். தேவையில்லாத கதையள் கதைக்கேலயே. இல்லாட்டி அவளுக்கு விளங்காத பாசையில கதைக்கிறமோ? அப்பிடியாய்த்தானிருக்கும்.'

(இன்னும் வரும்)

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)
கூறினார்கள்.

தொடர்ந்தும் பெண்கள் சந்தித்துக் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் இப்படியான சந்திப்புகள் ஒழுங்கு செய்யப்பட-வேண்டும் என்ற தீர்மானத்துடன் இச் சந்திப்பு முடிவடைந்தது.



"உங்கட தொகுதி மக்களின்ரை வீடில்லா குறையை கேட்டறிய இண்டைக்குப் போறதாய் சொன்னியள். இன்னும் போகேலயே"

"நானே பெரிய கஸ்ரத்தில இருக்கிறன். வீட்டு எயக்கொண்டிசன் மெசின் பழுதாய் போச்சு. திருத்த இப்ப ஆள் வரும். அதாலகூட்டத்தை ரத்துச் செய்துபோட்டு வீட்டிலயே நிக்கிறன்"

- இன்னன்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# படைப்பும் நுகர்வும்

(கலம் 26இன் தொடர்ச்சி)

சிற்றேடுகளுக்கும், சிறுபிரசுர முயற்சிகளுக்கும் எப்போதுமுள்ள ஓர் இடையூறு உறுதியான பொருளியல் அடிப்படை இல்லாமைதான். இது மிகவும் வேதனை தரும் நிலைமையே.

அநேகமான சிறு பிரசுர முயற்சிகளுக்கு மூலதனமாக உள்ளது வெறும் ஆர்வம் மட்டுமே இது விசனிக்கத்தக்கது.

வெறும் ஆர்வம் என்று நாம் கூறுகிறோம். ஏன்? சஞ்சிகைகள் வெளியாக வேண்டும் என்ற ஆர்வம் எழுத்தாளர்களிடம் உள்ள அளவுக்கு வாசகர்களிடம் இல்லை. புத்தக வெளியீட்டைப் - பொறுத்தவரையிலும் நிலைமை அதுவேதான்.

என்றாலும் வாசகர்களின் ஆர்வக் குறைவைப் பளிச்சென்று காட்டவல்லனவாக உள்ளவை சஞ்சிகைகள்தான். மாதமொரு முறையோ, ஆண்டுக்கு மூன்று நான்கு தடவையோ வெளிவர வேண்டிய சஞ்சிகைகள், ஐந்தாறு இதழ்களுக்குப் பிறகு அல்லது எட்டு பத்து இதழ்களுக்குப் பிறகு சில வேளைகளில் ஒரேஒரு இதழோடுகூட நின்றுபோய் விடுகின்றன. அப்போதுதான் வாசகர்களின் ஆர்வமின்மையும், உதாசீனத்தையும் நாம் வெளிப்படையாக -பட்டவர்த்தனமாக - உணர்ந்து கொள்ளுகிறோம். எழுத்தாளர்களின் ஆர்வம் மட்டும் சஞ்சிகைகளுக்கு மூலதனமாக உள்ளமை நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.

எழுத்தாளனின் ஆர்வம் என்னும் இந்த மூலதனம் ஒரு சஞ்சிகைக்குப் போதுமா?

இல்லை. போதாது. போதவே போதாது.

ஏனென்றால் எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்கள் இலட்சிய வேட்கை மிகுந்தவர்கள். எண்ணங்களிடையே சஞ்சரிப்பவர்கள். கற்பனை உலகில் நடமாடுபவர்கள். இதனால் -

இவர்கள் நடைமுறை உலகியல் விவகாரங்களில் அக்கறை குறைந்தவர்களாக இருக்கிறார்கள். சஞ்சிகை வெளியீட்டையோ புத்தக வெளியீட்டையோ ஒரு வியாபாரமாக நினைத்துப் பார்க்க இவர்களால் முடிவதில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி நினைத்துப் பார்ப்பதில் இவர்களுக்கு நாட்டமும் இல்லை

இவர்கள் சஞ்சிகை வெளியீட்டையும், புத்தக வெளியீட்டையும் ஒரு தொண்டாக நினைப்பதுடன் நின்றுவிடுகிறார்கள்.

இவர்களுடைய தொண்டுள்ளம் பாராட்டத்தக்கது. ஆனால் நடைமுறை உலகியல் உணர்வு இல்லாத இவர்களுடைய தொண்டு தன்னையே தாங்கிக்கொள்ளும் வலிமை அற்றதாக உடைந்து கவிழ்ந்து போகிறது. எத்தனை கொடூரமான சோக முடிவு இது!

## இ. முருகையன்

புத்தக வெளியீடும் சஞ்சிகை வெளியீடும் பெரிய இலாபம் தரும் தொழில்களாக எழுச்சி பெறுவிட்டாலும் பரவாயில்லை. நட்டமில்லாத தொழில்களாகவேனும் நடக்க வேண்டாமா?

அப்படித்தான் நடக்க வேண்டும். அதுதான் எல்லோருக்கும் நல்லது.

இந்த காரியத்தை எப்படிச் சாதிக்கலாம்?

தொழில்நுட்பம் கைவந்தவர்களே தொழில்களை நடத்த வேண்டும். திட்டமிட்டு நடத்தவேண்டும். திட்டமிடும் நுட்பம் கைவந்தவர்கள் திட்டமிடவேண்டும். எழுத்து நுட்பம் கைவந்தவர்கள் எழுத வேண்டும். ஆனால் எழுதுவது டன் மட்டும் நின்றுகொள்ள வேண்டும். ஓவிய நுட்பம் கைவந்தவர்கள் ஓவியம் வரைவதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். கணக்கு பதிவு கற்றவர் இலாப நட்டக் கணக்குகளை முறைப்படி பதிந்து காட்ட வேண்டும். அச்சடிப்பு நுட்பம் கைவந்தவர் அச்சடிப்பு வேலையைச் செய்ய வேண்டும். விற்பனை நுட்பம் கைவந்தவர் விற்பனையைப் பொறுப்பேற்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால்,

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்".

மக்களின் பொருட்டுஎழும் இலக்கியம் அந்த மக்களைத்தக்கபடி சென்று அடைகிறதா? என்னும் கேள்வி பிரதானமானது.

தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் என்று கதைகளையும், கவிதைகளையும் எழுதுகிறவர்கள் சிலர் நம்மிடையே உண்டு. இவர்கள் எழுதும் இந்தக் கதைகள் தொழிலாளரிடையேயும், விவசாயிகளிடையேயும் எந்த அளவுக்குச் சென்று செறிக்கின்றன? சுவறுகின்றன?

இப்படிப்பட்ட கேள்விகளை நாம் கேட்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பட்டமான உண்மையை பட்டவர்த்தனமாகச் சொல்வதானால், இந்த நாவல்களையும், கதைகளையும், கவிதைகளையும்– ஐம்பது குடியானவர்கள் கூட வாசித்திருக்க மாட்டார்கள்.

ஏன்?

புத்தகங்களை வாங்க அவர்களுக்கு வசதி இல்லை. நாவல்களைப் படிக்க அவர்களுக்கு – நேரமில்லை. ஆகையால் அந்தப் பழக்கமும் அவர்களுக்கு இல்லை

மக்களிடையே இலக்கியங்களைப் பரப்ப வேறு வழிகளையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும். புத்தகமொன்றை எடுத்துக் கொண்டுபோய் ஒரு மூலையில் உட்கார்ந்து தனித்துப் படிக்கும் பழக்கம் – மௌனமாக வாசித்துவிட்டுத் திருப்தியடையும்முறை –பணவசதியும், நேர வசதியும் உள்ளவர்களுக்கே உவப்பானது. அவ்வசதி இல்லாத பிறரிடம் இலக்கியப் பற்றையும், இலக்கிய நயப்பு ஆர்வத்தையும் உண்டு பண்ண முடியாதா?


ஏன் முடியாது? தாராளமாக முடியும்.


எப்படி?

ஒவ்வொருவரும் ஒவ்வொரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு மூலைக்குப் போய் ஒதுங்கியிருந்து படிப்பதை விடுத்து, எல்லோரும் ஒரே இடத்தில் கூடவேண்டும். ஒருவர்

(தொடர்ச்சி 31ஆம் பக்கம்)

## நூல் அறிமுகம்






தொடர்புகட்கு:

AANAA AAWANNAA IENAA
Postbus 8523
8905 K M LEEUWARDEN
Nederland



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# கனவுகள்.... வெடிகள்.....

(கலம் 27இன் தொடர்ச்சி)

இரண்டு சகோதரர்கள் மாறி மாறி பாதையின் இருமருங்கும் மோட்டச்சைக்கிளில் இருந்தவாறே நோட்டமிட்டார்கள்

பின்னால் இரண்டு ஜீப்வண்டிகள் வந்துகொண்டிருந்தன. அதில் ஒன்றில் இருவர் மேற்கத்திய இசைக்கு இடுப்பு முறிய முறிய ஆடிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் கேள்விகள்-கேட்கவேண்டும் என்ற தன்நீண்ட நாள் ஆசையுடன் ஒரு மோட்டசைக்கிளை அணுகி தன்னுடைய சைக்கிளை நிறுத்திக் கொண்டான் யோகன்.

"உங்களோட கதைக்க-வேணும்"

மோட்டச் சைக்கிளில்இருந்தவர்கள் வாய்ப்பாடு போல சிலவரிகளை எடுத்துவிட்டபோது அவன் இடைமறித்து, "உங்களிட்ட இல்லை. உங்களைக் கூட்டிக்கொண்டு வாறவையிட்ட"என்று சொல்லும்போது ஜீப் ஒன்று அவர்களை நெருங்கியது.

யோகனின் விண்ணப்பம் உடனடியாக ஜீப்புக்குக் கடத்தப்பட்டது.

"என்னவாமடா?"

"கேள்வியள் கேக்க வேணுமாம்"

"கிடந்தான். நீ எடடா ஜீப்பை"

தான் முன்பு இணைந்திருந்த இயக்கத்தில் இதே வார்த்-தைகளைக் கேட்டிருந்ததால் புதிதாக எதுவும் யோகனுக்குத்-தோன்றவில்லை.

மணலில் மாண்ட சைக்கிள்சில்லை எடுத்து அவர்களுக்குவழிவிட்டு சந்தைக்குப் போனான்.

*

பாலன் தனது வீட்டுத் தேவைகள் காரணமாக இரண்டு லோட் விறகு ஏற்றினான். அவனுடைய நிலைமை அன்று முதலாளி வரவில்லை. லொறி மட்டுந்தான் வந்தது. பணம் கிடைக்காததால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோகமாகவே வேலை செய்து கொண்டிருந்தான்.

செல்லத்துரை கடையில கடனுக்குச் சாமான்களை வாங்கலாம் என்று நினைத்தவன் ஒண்டுக்கு ரண்டு மடங்குவிலை குடுக்க வேணுமே என்று யோசித்தாலும், சரி.. பெடியனுக்குச் சாப்பாடு, பின்னைக்கு மா எண்டால் வாங்கத்தானே வேணும் என்று முடிவு செய்து கொண்டான்.

வேலை முடிந்து வரும்போது மறக்காமல் செல்லத்துரையின் கடையில் சாமானுகளும் வாங்கிக் கொண்டான்.

வண்டில் சத்தம் கேட்டதும் மாலதி ரோட்டுக்கு வந்து விட்டாள்.

## செ. கதிரவேலு

படலையைத் திறப்பதற்கு முதலே "இண்டைக்குப் பெடியங்கள் வந்தவங்கள். நேற்றுப் பக்கத்து வீட்டு கனகர் குடும்பம் சாப்பாடு குடுத்தாம். நாளைக்கு நாங்கள் எண்டு நினைப்பூட்டிப் போட்டுப் போகினம்" என்றாள் படபடவென்று.

"சாமான்கள் வாங்கியந்தனான்" பாலன் வண்டிலை விட்டிறங்கினான்.

"முதலாளி வந்தவரே?"

"இல்லை"

"அப்ப எங்கால காசு?"

"செல்லத்துரை கடை"

வண்டிலைக் கொட்டிலில் விட்டு, மாடுகளை அவிழ்த்துக்கட்டிவிட்டு சாப்பிடப் போனான்.

மறுநாள் பகல் தவிடு வாங்கப் பாலன் மில்லுக்குப் – போய்க்கொண்டிருந்தபோது வழியில் இடுப்பில் கைக்குழந்தையுடன் தேவி குறுக்கிட்டாள். மூத்தவன் தாயை ஒட்டியபடி நின்றான்

"எங்க தேவி வெயிலுக்க வெளிக்கிட்டிருக்கிறாய்?" கேட்டபடி சைக்கிளை சிலோவாக்கினான் பாலன்.

"உங்களைத் தேடித்தான் வந்துகொண்டிருக்கிறம்"

"ஏன் தேவி? என்ன விசயம்?"

"நான் முழுவியளத்துக்கு கூடாது. நீங்கள் தொழிலுக்கு போறனியள்" வெள்ளைச் சீலை கட்டியிருந்த தேவி தளதளத்தாள்.

"சீ. நான் உதுகளைப்பாக்கிறதில்லை. என்ன விசயம் எண்டு சொல்லன் தேவி"

"இளையவனைக் கந்தையரின்ரை கடையில விட்டிருக்கிறன் நீங்கள் காட்டுக்குப் போகேக்கை இவனையும் கூட்டிக்கொண்டு போய் ஏதாவது தாங்கோ" தேவி மூத்தவனைக் காட்டி கெஞ்சினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இன்டைக்கு பள்ளிக்குடத்தில பெடியனொருத்தன் எக்கச்சக்கமான கேள்வியொன்டை கேட்டிட்டான்"

"அப்பிடியென்ன கேள்வி?"

"சங்கிலியன், பண்டாரவன்னியன், எல்லாளன் என்டு இவையளைப் பற்றிமட்டுந்தான் நெடுகச் சொல்லி பெருமையடிக்கிறியள். தனிய இவையளால எப்பிடிச் சண்டை பிடிக்கேலும்? இவைக்காண்டி எத்தினைபேர் தங்கடை உயிரை விட்டிருப்பினம். என் அவையைப் பற்றி ஒன்டுமே சொல்லாம ராசாக்களைப் பற்றி மட்டுந்தான் சொல்லிக்கொண்டிருக்கிறியள் என்டான். அவையளைக் கொண்டதே இந்த ராசாக்கள் தான் என்டு மறுமொழி சொல்லிப்போட்டன். இப்ப பயமாயிருக்கு"

— இன்னன்கு

அவளின் குடும்ப நிலையை எண்ணிப் பார்த்தபோது பாலனுக்குத் துக்கம் பொத்துக்கொண்டுவந்தது.

'என்ன உலகம்..? பதினாறு வயதுப் பெடியனைக் காட்டுக் கூட்டிக்கொண்டு போகச் சொல்லி தாயே கேக்க வேண்டியிருக்கு'

தேவியின் கணவன் கோபாலன் பாலனின் பழைய நண்பன். ஒரு வருடத்திற்கு முன் மணியம் முதலாளியுடன் அவனுக்கேற்பட்ட தகராறில், மணியம் முதலாளியின் வாகனம், வீடு என்று பலவற்றைப் பாவித்து வந்த இயக்கம் ஒன்று கோபாலன் மேல் இல்லாத பழியைச் சுமத்தி அவனைக் கொன்று தொங்கவிட்டார்கள். முதலாளியிடம் இன்னும் கூடுதலான வசதிகளைத் தாங்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பழையதை நினைத்துக் – கொண்ட பாலனுக்கு, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்த நண்பன் கோபாலனின் மனைவி இப்போது உதவிக்காகக் – கெஞ்சும்போது மறுக்க முடியவில்லை.

"நா ளைக்குப் போக மாட்டம். இனிச் சனிக்கிழமைதான். மகனை வெள்ளன அனுப்பிவிடு" என்று விடைபெற்றுப் போனான் பாலன்.

*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோகன் வயலுக்குப்போ கவந்தபோது வழியில் பாலனை கண்டான்.

பெரிய மதகொன்றில் அமர்ந்து பாலன் கோடாலிகளை தீட்டிக் கொண்டிருந்தான். பிள்ளைகள் அருகில் விளையாடிக் - கொண்டிருந்தார்கள்.

"என்ன இண்டைக்கு காட்டுக்குப் போகேலயே?"

"இண்டைக்குப் பெடியளுக்கு புட்டு அவிச்சுக் குடுத்தனுங்கள். அதால..."

"விடு. விடு. நான் மறந்தே போனன்"

"எங்கை போருய்? வயலுக்கே?"

"ஓம். நாளைக்கு எத்தினைபேர் காட்டுக்குப் போறியள்?"

"ஒரு வண்டில் கூட. ஆர் இராசையர், அமுதன், கிட்டினன், கண்ணன்...."

"போதும்"

"சனிக்கிழமை சந்தைக்கு போனு ஒரு மூட்டை புண்ணுக்கு வாங்கிச் சுந்தரத்தாற்றை வானில போட்டு விடுவியே?"

"சிலநேரந்தான் போவன். போனு வாங்கிப் போட்டு விடுறன்" சொல்லிவிட்டு சைக்கிளை வயலை நோக்கி உழக்கினுன்.

அவனது சிந்தனை முழுக்க சனங்களையே சுற்றிச் சுற்றிவந்தது.

இயக்கத்துக்குப் போய் திரும்பியதாலும், அங்கு பெற்ற அனுபவங்களினுல் விடுதலை என்றுல் என்ன? யாருக்கு விடுதலை? யார் எதிரி? யார் நண்பன்? எல்லை போடுவது மட்டும் விடுதலையா? என்று பல கேள்விகளுக்கு விடைதேடக் கூடியவனுகவிருந்தான்.

சனங்களுடன் இக் கேள்விகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அவர்களைத் தெளிவு படுத்த வேண்டும் என்றெல்லாம் அவன் விரும்பினுலும் கூட தலைவிரித்தாடிய ஆயுதக் கலாச்சாரத்தினுல் தனக்குள்ளேயே எல்லாவற்றையும் பூட்டி வைத்துக் கொண்டான்.

பாலனைப் பற்றி நினைத்துக் கொண்டான்.

இவ்வளவு வயல்கள் இருந்தும் பாலனுல் வயலுக்குள் இறங்க முடியவில்லையே. இந்தக்காணியள் எல்லாம் இந்த மண்ணுக்குச் சொந்தமில்லாதவைக்குத்-தானே இருக்கு.

ஏன் ஒரு போராட்டம் தொடங்கி மரம் வெட்டுறதை- நிப்பாட்டப்படாது..?

பிறகு ஏழை, எளியதுகளுக்கு பவுண் விலைக்குத்தான் விறகு விப்பாங்கள்.

ரண்டு மரம் நட்டுப்போட்டு ஒரு மரம் தறிக்கிறதெண்-டால் பறவாயில்லை. இதென்ன?

www.tamilarangam.net



பயங்கர அழிப்பெல்லோ அழிக்கிறுங்கள். அதுக்குள்ள ஒரு பொமிற்றுக்கு ரண்டு, மூண்டு வொறியும், கள்ளமாய் வைர மரங்களும்...

சனம் என்ன செய்யும்? மனிசரைத் தறிக்கிறதே கேக்கேலாததாய் கிடக்கு. இதுக்க இயற்கையைப் பற்றி ஆர் கவலைப் படுறது?

தனக்குள் பலவற்றை யோசித்துக் கொண்டிருந்தாலும் வழி தவறுமல் சைக்கி ஓட்டிக்கொண்டிருந்தான் யோகன்.

முன்னுக்கும், பின்னுக்கும் ரண்டெழுத்துப் போட்டால் காணுமெண்டுதானே கனபேர் படிக்கினம். சமூகத்தைப் பற்றியும் அதின்ரை எதிர்காலத்தைப் பற்றியும் எதில எவ்வளவுபேர் உண்மையாய் அக்கறைப்படுகினம்?

சரி. உத்தியோகம் எண்டு சொல்லிப்போட்டு இங்க வந்து உத்தியோகமே பாக்கினம்..?

உள்ள நாட்டு முதிரை, பாலை மரங்களை தங்கட வீட்டுக்கும், சொந்தக்காறருக்குமெண்டு கள்ளப்பொமிற் எடுத்தெல்லே அலுவல் பாத்து அள்ளிக்கொண்டு போகினம்.

அதுகுமில்லாமல் அம்பது நூறு வருச மரங்களை ஏதாவது சாட்டுச் சொல்லி, சட்டம் - போட்டு தங்கட ஊர்க் கோயிலுக்குத் தளபாடம் செய்யினம்!

பசிக்குத் தவளை ஒன்றை துரத்தி வந்த பாம்புமீது சைக்கிள் சில்லு ஏறி விழுந்த போது தான் வயலுக்குள் வந்து சேர்ந்துவிட்டதை யோகன் உணர்ந்-தான்.

*

நாளைய வேலையை நினைத்த நேரத்துடனே நித்திரைக்கு ஆயத்தமானுன் பாலன். படுப்பதற்கு முன் வண்டில், மாடு எல்லாவற்றையும் போய் பார்த்து விட்டு வந்து படுத்தான்.

மாலதி பிள்ளைகளைத் - தூங்க வைத்துக்கொண்டே "வண்டிலுக்குக் கொழுப்புப் போட்டனியளே? தண்ணி ரியூப் எங்க? தேவியின்ரை மகனை பாரந் தூக்க விடாதைங்கோ" என்று அடுக்கிக்கொண்டிருந்தாள்.

காதில் விழுந்தவற்றிற்குப் பதிலும், கேட்காதவற்றிற்கு குறட்டையுமாகத் தூங்கிப் போனுன்

www.tamilarangam.net

பாலன்.

*

யோகன் சனிக் கிழமை காலை சந்தைக்குப் போகவில்லை.

பல்லுக்கு வேப்பங் குச்சி வைத்துத் துவைத்துக்கொண்டிருந்தவன் பாலன் புண்ணுக்குக்கு சொல்லிவிட்டது ஞாபகம் வர, தெரிந்தவர்கள் யாராவது வந்தால் சொல்லிவிடலாம் என ரோட்டுக்கு வந்தபோது மெசின் ஒன்று வந்துகொண்டிருந்தது.

அதில் வந்தவனிடம் சொல்லிவிட்டு, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"இந்தாடா தேத்தண்ணி" என்று தாய் கூப்பிட்டாள்.

"தேத்தண்ணி வேண்டாம். நேற்றையான் சோறு கிடந்தது கரைச்சுத் தாங்கோ"

குடித்து, முடித்தபின் தன்னுடைய சங்கீத ராசனில் சந்திக்குப் போனான். அங்கே யாராவது பேப்பர் கொண்டுவருவார்கள். செய்தி அறியலாம்.

சந்தியை நெருங்கும்போது முருகேசரின் வான் வந்து - கொண்டிருந்தது.

இவன் சைக்கிளை நிறுத்தி இறங்கியதும், முருகேசரும் சாக்குடன் இறங்கினர்.

"அண்ணை பேப்பர் கொண்டந்தனியளோ?"

"ஓமடா பொறு" முருகேசர் பேப்பரைத் தேடியெடுத்துக் கொடுத்தார்.

யோகன் ஓரமாகப்போய்நின்றுகொண்டு வாசிக்க ஆரம்பித்தான்.

ஒருபக்கம் தமிழ் குழுக்களிடையே போட்டிக் கொலைகள், அரசியல் திருவிளையாடல்கள், அடுத்த பக்கத்தில் தென்பகுதிக் கொலைகள். கண்டியில் தலை, கழுத்துறையில் முண்டம் என்று விளக்கங்கள்.

விரக்தியுடன் கடைசிப்பக்கம் தட்டினான்.

அவனின் கிராமப் பெயருடன் இன்று முதல் அமுல் என்று தலைப்புப் போடப்பட்டிருந்தது

பாலம் ஏதேன் திருத்தப் போறாங்களோ? பள்ளிக் கூடம், ரோட்டு மூச்சு விடுற நேரத்தில என்னத்தை அமுலாக்கப் போறாங்கள்? என்ற கேள்விகளுடன் அச்செய்தியை கூர்ந்து படிக்கலானான்.

அக்கிராமக் காட்டுக்குள் மரம், விறகு தறிக்கக்கூடாதென்றும், மீறினால் தாட்டு வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடி......

தொடர்ந்து செய்தியைப் படிக்க முடியாமல் யோகன் நிலைகுலைந்தான். பேப்பரை அப்படியே போட்டுவிட்டு சைக்கிளில் ஏறி வேகமாக மிதித்தான்

காட்டுக்க பாலன், இராசையா, அமுதன், தேவியின்ரை ச

www.tamilarangam.net

ன்னப் பெடியன்...என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே பிரதானவீதியில் ஆரவாரங்கள் எழுந்தன.

"ஐயோ என்ரைபிள்ளை"

"அண்ணேய்.."

"அப்பா போட்டியளே"

"காட்டுக்குப் போனவர்கள் கண்ணிவெடியில் அகப்பட்டுச் சிதறிப் போனார்களாம்"

கிராமமே காட்டைநோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அங்கே பெருங்கூட்டம் கூடியிருந்தது

"ஒருதரும் உள்ளுக்குப் - போகாதையுங்கோ" சேகரத்தார் எச்சரித்தார்.

யோகன் அவரை அண்மித்தபோது "உதுக்க இருந்த இயக்கப் பெடியள் ரவுண்டில பாதுகாப்புக் கிடைச்சிட்டுதெண்டு - நேற்றுப் பின்னேரமே ரவுண்டுக்குப் போட்டாங்கள்" என்று விபரித்துக் கொண்டிருந்தார்.

எல்லோரும் செய்வதறியாமல் கவலைப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, முன்பு தான் இயக்கத்திலிருந்தபோது பெற்ற அனுபவத்துடன் யோகன் காட்டுக்குள் புகுந்தான்.

இடம் நெருங்கிவிட்டது. நிதானத்துடன் பார்த்தான். பெரிய கிடங்கு. குனிந்து பார்த்த யோகனின் தலையில் இரத்தச்-சொட்டு விழுந்து வழிந்தது.

அண்ணாந்து பார்த்தான். சிதறிய மனித உடல்கள் இரத்தக் கசிவுடன் மேலேயும் தொங்கிக் கொண்டிருந்தன.

எதுவுமே அடையாளமாக கிடைக்கவில்லை.

மனித உடல்களின் சிதைவுகளைப் பொறுக்குவதற்காக, காட்டுக்கு வெளியே நிற்பவர்களை அழைப்பதற்கு வெளியே வந்தபோது யோகன் தீர்மானித்துக்கொண்டான். இனியும் அவனால் மௌனமாயிருக்கமுடியாது.

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரத்து இதமாக வாசிக்க, மற்றவர்கள் காதுகொடுத்துக் கேட்கவேண்டும்.

பின்னர் படிக்கப்பட்டதையிட்டு ஆராய்ச்சிகளும், விமர்சனங்களும் நடக்கவேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால் இலக்கிய அரங்குகளை நாம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

---

(சென்னை புக்ஸ் வெளியீடான இன்றைய உலகில் இலக்கியம் என்ற கட்டுரைத் - தொகுப்பிலிருந்து ஒரு பகுதி நன்றியுடன் மறுபிரசுரஞ் செய்யப்பட்டுள்ளது)

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு மரணம் இனிக்கும்

பஞ்சு மேகம் ஓடித்திரியும் வானம்
இழந்து
நஞ்சு மேகம் நோயைப் பொழியும்
நாட்டில்
என்னை நானே அடகு வைத்தேன்.

வீட்டுச் சுமையும், வாழ்க்கைச் செலவும்,
இன்னோரன்ன இடரும், துயரும்
சுரண்டிப் பிராண்டிக் கடித்துக் குதறி என்னை எழுப்ப
தூக்கக் கயிறு முறிந்து விலகும்.
தூக்குக் கயிறு விழுந்து கவ்வும்.

வீட்டு நூல் விலகி
வேலைக் கயிறு இறுகும்.

இயந்திரத்தோடு இயந்திரமாய்
இயங்கி,
இ ய ங் கி
இளைத்துக் களைத்து
இருட்டில் விழுந்து
வீட்டில் மிதப்பேன்.

இடையில் பஸ்ஸும், ரெயிலும்
என்னைச் சுமக்கும்.

கறுப்பன் !
அந்நியன் ! !
காட்டுமிராண்டி ! ! !
வார்த்தை வதைமுகாம்
தேகம் முழுக்க ஆணி அடிக்கும்.

காயங்களில் ஈரமாக
மொய்க்கும் சில பார்வைகள்.

www.tamilarangam.net

மீண்டும்
மீண்டும்
ஒவ்வொரு காலையும் உதயம் தொலைத்து
என்னைத் தின்னும்.

மீதி ஊனை
இயந்திரம் நசித்துத் தின்று
அடிக்கிக் கொண்டேயிருக்கும்
நோட்டுக்களை
யாருக்கோ !

தவறி விழும் சில்லறைகளிலும்
சதங்கள் எண்ணி
எலும்புக் காட்டுக்கு முண்டு கொடுப்பர்
நாளை
மீண்டும் இயங்குவதற்காகவே.

அன்பு மனைவி, செல்லக் குழந்தை
முகத்தைக் காண
தேக்கி வைத்த ஆசை கொண்டு
ஓடி வருவேன்
ஏக்கத்தோடு.

பேசும் வார்த்தையும்
ஊமைப் பாசையாய்
பார்வை மேய்ச்சலின்
பாதி வழியில்
தூக்கம்
என்னைத் தூக்கித் தனக்குள் புதைக்கும்.

எத்தனை
கொடுமை.

சில விநாடிகளில்
ஒரு
மரணம் இனிக்கும்.

நீண்ட நீல நில வெ(ா)ளியில்
நீந்தும் என்
தொட்டிலும்,
ஓடித் திரிந்த வயல்வெளியும்,
கூடியுழைத்த தோட்ட நிலமும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களிமண் எடுத்துக் கடவுள் செய்த
குளத்துக் கரையும்,
பொருக்குக் கிணற்றில் குடிநீர் மொண்டும்
பானைகளும், குடங்களும்,
காதல் யாசகக் கட்டுக் கிணறும்,
வெண்மணல் முற்றத்தில்
நிலவொளியின் பருகலோடு
குடித்த
கூழும்,
நெருப்புப் பந்து நீலக் கடலில்
விழுந்து குளிக்கும்
இயற்கை பருக இருக்கை தந்த
கருங்கற் பாறையும்,
நிழல் அளந்து நேரம் சொல்லும் மனிதர்
உயிரும்,
உறவும்...

இத்தனையும் இழந்து
சோகப் பிராண்டலில்
ரணமாகிக் கனத்த நெஞ்சுடன் நான்
இங்கே.

ஏன்?!

சிவம்



"தனியக் கடத்தல், கொள் ளை, கொலை
யெண்டு செய்யிற நாங்கள் இப்பிடி ஒரு
மேசையில பேரம் பேசவும், எங்களுக்கு
ள்ள அடிபாடுகள் வராமல் பாக்கவும்
ஒரு சந்தர்ப்பம் வருமெண்டு எனக்குஅப்
பவே தெரியும்"

"எப்பிடி?"

"எங்களுக்கெண்டு தனித்தனிப் பாணியிருந்
தாலும் எங்கள் எல்லாற்றை நோக்கமு
ம் ஒண்டுதானே"

– இன்னன்ஒ

www.tamilarangam.net

# யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைவரை

திருகோணமலை நகரத்திலிருந்து இம்மாத முடிவிற்குள் – (மார்ச் மாதம்) இந்தியப்படை வெளியேறிவிடும் என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டதாலும், வடக்குக் கிழக்குப் பகுதிகள் வழமை நிலைக்குத் திரும்பிவிட்டதாலும் (இந்த வழமை நிலைக்கு அற்ப ஆயுசா, தீர்க்க ஆயுசா? என்ற விவாதம் ஒருபுறம் இருக்க) வடக்கு–கிழக்கு முழுவதும் ஒரு பத்திரிகையாளனாகப் பயணப்பட்டேன்.

சீருடையில் சோதனை நிலையங்களையும், அரணையும் நடத்துகின்ற இளம் புலிகளையும், சைக்கிள்களில் ஆயுத பாணியாய் இருவர் இருவராக ரோந்துபுரியும் புலிப் பெண்களையும் தாண்டி கேரதீவு–சங்குப்பிட்டி, பூநகரிப் பாதையூடாகச் சென்று பார்ப்பது என்று தீர்மானம்.

பரந்தன் வந்து திருகோணமலை நோக்கிப் பயணப் பட்டோம். வவுனியாவரை அங்குமிங்கும் புலிக்கொடி பறந்துகொண்டிருந்தது. ஒருவகை சாவகாசமும், அமைதியும், உச்சி வெய்யிலோடு சேர்ந்து தேசத்திற்கு ஒருவகையான 'நிம்மதி'யையும் விபரீத உணர்வையும் கொடுத்துக் கொண்டிருப்பதாய் தோன்றிற்று. பல்வேறு குழுக்களின் துப்பாக்கிகளின் கீழ் அல்லல்பட்ட 'அப்பாவிப் பொதுமக்களுக்கு' ஒரு துப்பாக்கியின் கீழ் இருப்பது 'ஒப்பளவில்' அமைதியையும், நிம்மதியையும் தற்காலிகமாகவேனும் தருகின்றன என்பது உண்மைதான்.

"எப்படிப் பெரியவர் நிலைமை?" என்று வவுனியாவில் ஒரு விசாரிப்பு.

"பிரச்சினை இப்ப இல்லை. எப்ப வருமோ தெரியாது"

நிச்சயமின்மையும், அரசியல் அரங்கில் என்ன நடக்கின்றதென்பதும் திட்டவட்டமாகத் தெரியாமல் மக்கள் ஒருவகை திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள்.

www.tamilarangam.net

வவுனியாவுக்கு அப்பாலே சிறிலங்கா இராணுவ முகாம்களிலும் சோதனை எதுவும் இருக்கவில்லை. திருகோணமலையை அடையும்வரை இந்த நிலையே நீடித்தது. பன்குளம், தன்னியா வீதியூடாகத் திருமலை செல்வதாக இருந்தது தீர்மானம்.

வழியெங்கும் சிறி லங்கா இராணுவ முகாம்கள்தான்.

## வொன்ரர் கெலர்

1983இற்குப் பிற்பாடு போடப்பட்ட எந்த ஒரு முகாமும் திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை நீக்கப்படவில்லை.

பன்குளத்தைத் தாண்டி வரும்போது மூன்றும் கட்டையில் புலிகள் முகாம் அமைக்கும் ஏற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. அப்போதுதான் சிறுவன் ஒருவன் புலிக்கொடியுடன் கம்பம் ஒன்றின் மீது ஏறிக்கொண்டிருந்தான்

இன்றைய திகதி 12. இந்தியப்படை திருமலையின் கிராமப்புறங்களைவிட்டு வெளியேறிவிட்டது. அவர்கள் இருந்த இடங்களில் சாட்சியமாக உடைக்கப்பட்ட காவலரண்களும், காற்றில் கொஞ்ச மணமும் இன்னும் எஞ்சியிருந்தது.

பன்குளத்திலிருந்து திருமலைவரை புதிதாக ஒன்றிரண்டு முகாம்களை இலங்கைப் படை அமைத்திருந்தது. முகாம்களின் தற்போதைய மொத்த எண்ணிக்கை 6.

பன்குளம் உபதபால்நிலையப் பெயர்ப்பலகையில் என்ற ஆங்கில எழுத்துகளோடு புதிதாக ஒரு யும் சேர்ந்துள்ளது. தம்பலகாமமும் 'தம்பலகாமுவ' ஆக உருமாற்றம் பெற்றிருந்தது.

திருமலை நகருக்குள் நேரேசென்றோம். இந்தியப் படையினர்தான் எங்கும் நிறைந்திருந்தனர். போவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மூதூருக்குச் செல்லும்வழியில் துறையடியில் இறங்கி ஒரு விசாரிப்பு.

"இன்னும் இந்தியப் படை போகவில்லையா?"

"அவர்கள் பிறிமா ஆலையூடாகத்தான் செல்கிறார்கள். அங்கு செல்லுங்கள்"

பிறிமா ஆலையின் இறங்குதுறை சீனன் குடாவில் இருந்தது சீனன்குடாவிற்குச் செல்லும் வழியில் ஒரு இந்தியப்படை முகாமில் அவசர அவசரமாக மூட்டை, முடிச்சுகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

"படம் எடுக்கலாமா?" என்று கேட்டோம்.

"நோ"

"கொமாண்டர் இருக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருரா?"

"யெஸ்"

"எங்கே?"

"நோ"

இந்தியச் சிப்பாயுடன் உரையாடுவதைப்போல சுவாரசியமான அனுபவம் வேறெங்கும் கிடைக்காதது.

ஒருவழியாக மூட்டை, முடிச்சுகளுடன் இருப்பவர்களைப் படம் பிடித்தேன்.

"இலங்கையிலிருந்து நேராகக் காஷ்மீருக்கா போகிறீர்கள்?" என்று கேட்டபொழுது அவர்கள் சிரித்தார்கள்.

சீனன்குடா இறங்குதுறைக்குள் அனுமதிக்கச் சிரமப்பட்டார்கள். உத்தரவு தேவை என்றார்கள். சிங்களம், ஆங்கிலம், தமிழ் மூன்று மொழிகளிலும் தலைகீழாக முயன்றும் தோல்வி.

திரும்பி மறுபடி நகருக்கு வந்து முதல்வர் வரதராஜப்பெருமாளின் அலுவலகத்துக்குச் சென்றோம். பூட்டு. அப்படியே எல்லா மாகாண அரசு அமைச்சரகங்களையும் ஒரு சுற்றுச் சுற்றினோம். ஈ, காக்காய் இல்லை. இரண்டு, மூன்று சிங்களப் பொலிஸ்காரர்கள் மட்டும்தான் இருந்தார்கள்.

யாழ்ப்பாணம், வவுனியா போலல்லாது திருகோணமலையில் தாக்கலாகத் தெரியும் வித்தியாசம் இதுதான். நிறையப் பொலிஸ்காரர்கள் ஆயுதங்களு



(சண்டே டைம்ஸ்)

மன். இந்தியப் படையினர் ஒரு முகாமைக் காலி பண்ணினால் இரண்டு செக்கன்களுள் வந்து பிடித்துக் கொள்கிறார்கள் ஒரு இடம் மிச்சம் விடாமல்.

மாகாண அரசின் பிரதிநிதிகள் ஒருவராவது கண்ணில் படவில்லை. எல்லோரும் இலங்கையைவிட்டே போய்விட்டார்கள்.

"விசர் நாய்கள் வரும்போது முன்னால் நிற்பதில் புத்திசாலித்தனம் ஒன்றும் இல்லை" என்று ஒரு மாகாண அரசியல்வாதி கப்பலேற முன்பு தெரிவித்தாராம். கடைசிவரை நின்று போராடுவேன் என்று அவர் விடுத்த அறிக்கையின் மை கூட இன்னும் காயவில்லை என்று ஒருவர் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவர்னரின் காரியாலயத்தில் சிங்கக் கொடியுடன் ஒரு கார் நின்றது. கவர்னர் இருக்கிறார் என்று தெரிந்தது. சபைத் தலைவர் ராஜகாரியர் இருப்பதாகக் கேள்விப்பட்டு விசாரித்தோம். அவரும் போய் விட்டாராம். போனவர்களுடன் கூடவே ரி.வி.கள், டெக்குகள், ஓடித்திரிந்த பேர்ஜோ வாகனங்களின் எஞ்சின்கள் எல்லாம் போய்விட்டதாக சிலர் சொன்னார்கள்.

இன்றைய திகதி 13. நிலாவெளி, குச்சவெளி முதலிய இடங்களுக்குச் சென்றோம். இறக்க கண்டிப் பாலத்தருகே ஒரு தரிப்பு. முஸ்லீம் மக்கள் வாழும் கிராமம் அது.

நாவாஸ் என்ற மாணவருடன் உரையாடினோம். கட்டாய இராணுவ சேவைக்கென ஈ.பி ஆர்.எல்.எவ். வினால் இழுத்துச் செல்லப்பட்டபின் தப்பி ஓடிவந்திருக்கிறார். இப்போது புலிகளுடன் சேர்ந்து பயிற்சி பெற்று விட்டு தொடர்ந்து படிப்பதற்காக வீட்டுக்கு வந்துள்ளார். இவருடன் நிறைய முஸ்லீம் இளைஞர்கள் புலிகளில் சேர்ந்து விட்டதாகவும், பயிற்சி பெற்றுவருவ-தாகவும் சொன்னார்.

திருகோணமலையைப்பொறுத்தவரையில் முஸ்லீம்கள் புலிகளை ஆதரிக்கிறார்கள் என்றும் மூதூர் நிலைமை தனக்குப் பரிச்சயமில்லையென்றும் சொன்னார்

"அஷ்ரப்பின் கொங்கிரஸ் என்ன மாதிரி?" என்று கேட்டோம். கொஞ்சப் பேரே இருப்பதாகச் சொன்னார்.

"மறுபடியும் மாகாணச-பைத் தேர்தல் நடைபெற்றால் முஸ்லீம்கள் யாருக்கு வாக்களிப்பார்கள்?" என்று கேட்டோம்.

"சொல்ல இயலாது. இதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்றார்.

"திருகோணமலையில் முஸ்லீம்கள் புலிகள் இயக்கத்துக்குத்தான் ஆதரவு என்கிறீர்களா?" என்று மறுபடி கேட்டோம்.

"பெரும்பாலும் அப்படித்தான். இறக்க கண்டியைப் பொறுத்தவரை அனைவரும் நீண்டகாலமாக எல்.ரி.ரி.ஈ.தான். அதுதான் ஜோர்ஜ் தம்பிராஜாவுக்கு எங்கள் மீது ஆத்திரம்"

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் உறுப்பினரும், மாகாணசபை அங்கத்துவருமான இவர் புலிகளால்கொல்லப்பட்டார்.

மற்றைய முஸ்லீம் மக்களிடமும் நிவாஸின் அபிப்பிராயம் தான் இருந்தது.

எனினும் முஸ்லீம் மக்கள் எந்த விடுதலை இயக்கத்துடனும் சேதனபூர்வமாக இணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் உணரக் கூடியதாகவிருந்தது. ஓட்ட-மாவடி போன்ற இடங்களிலிருந்தும் புலிகளுக்கு கணிசமானளவு முஸ்லீம் அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளனர்.

இருப்பினும் தனிப்படக்

www.tamilarangam.net

"நேற்றையான் கூட்டத்தில ஐயோ மக்கள் கொல்லப்படுகிறார்களேயென்டு சும்மா கண்ணீர் வடிச்சுப்போட்டுப் போனவர் இண்டைக்கு கொலைகாரர்கள் யார்? அவர்களை அம்பலப்படுத்துவோம். அவர்களை எதிர்த்து போராடுவோம் என்டு ஆவேசப்படுறார். ஒரு இரவுக்குள்ள

அப்பிடியென்ன நடந்திருக்கும்?"

"அவற்றை கட்சி ஆக்கள் நாலைஞ்சு பேரை நேற்று ராத்திரி துலைச்சுப்போட்டாங்களாம்"



— இன்னன்ஞ

கதைக்க நேர்ந்த முஸ்லீம்கள் பொதுவாகவே முஸ்லீம்களுக்கெனத் தனியான அரசியல் அமைப்பு இருக்க வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்துகிறார்கள்

எப்படிச் சிங்கள அரசிலும், இராணுவத்திலும் 'பெருக்குச்' சில தமிழர்கள் இருந்தார்களோ அப்படியே தமிழ் இயக்கங்களிலும் பெருக்கு முஸ்லீம்கள் இருக்கிறார்கள் என்று முஸ்லீம் இளைஞர் ஒருவர் அபிப்பிராயப்பட்டார்.

காளிதாசன் என்ற பெயரை 'காலித்' என்று மாற்றிவிட்டு முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளில் ஆதரவைப்பெற முடியும் என்று நம்பிய தமிழ் இயக்ககாரரும் இருக்கத்தான் செய்கிறார்களென பெயர் தெரிவிக்க விரும்பாத ஒருவர் கூறினார்.

நிலாவெளியிலிருந்து திரும்பும் வழியில், புலிகளின் காரியாலயத்தில் திருகோணமலைப் பொறுப்பாளர் தயாவுடன் உரையாடினோம்.

"இன்னும் சில தினங்களில் திருகோணமலை நகர் முழுவதையும் பொறுப்பேற்போம். இப்போதே உவர்மலைப் பகுதிகளுக்கு எம்மவர் சென்றுவிட்டனர். சிவில் நிர்வாகம் முழுவதும் எங்களிடமே தரப்படவேண்டும் என பிரேமதாசவிடம் கேட்டுள்ளோம்!! எல்லாம் அவரில்தான் தங்கியுள்ளது. நாங்கள் எதற்கும் தயாராயுள்ளோம்"

"கண்ட இடமெல்லாம் ஆயுதங்தாங்கிய பொலிஸ்காரர்கள் நிற்கிறார்களே. இது யாழ்ப்பாணம், மட்டக்களப்பைப் போலல்லாது மாறுபட்டுள்ளதே? "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கேட்டோம்.

"திருகோணமலை வித்தியாசம் தான். எனினும் பயப்பட ஒன்றும் இல்லை. போதுமானளவு புலிகள் உள்ளனர். பொலிசாரும் இராணுவத்தினரும் முகாம்களை விட்டு வெளியேறக் கூடாது என்று கேட்டுள்ளோம். இலங்கைப்படையுடன் மோதல் வரும் அபாயம் உடனடியாக இல்லை"

திருகோணமலையைப்பொறுத்தவரை இலங்கை அரசாங்கம் தீவிரமாகவும், விடாப்பிடியாகவும் இருப்பது உண்மை. திருகோணமலையிலிருந்து கந்தளாய் வரையும், பின்னர் கந்தளாயிலிருந்து அல்லையூடாக சோமாபுர என்ற எல்லைப்புறச் சிங்களக் கிராமம்வரை ஒரே இலங்கை இராணுவமயமாக இருந்ததை அப்பாதையூடாக மட்டக்களப்பு நோக்கிச் சென்றபோது பார்க்கக் கூடியதாகவிருந்தது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு இராணுவ முகாம். ஆளரவமற்ற காட்டுத் தெருவில் ஒவ்வொரு மைலுக்கும் இரண்டு இலங்கை இராணுவத்தினர் சிறு கொட்டில்களுக்குள் இருக்கிறார்கள்.

போகும் வழியில் சிற்றாறு எனும் இடத்தில் ஒரு பாலம். பாலத்தில் அப்போதுதான் முகாம் அமைத்துக்கொண்டிருந்தார்கள்.

சோமபுரவில் சிங்களக் குடியேற்றவாசி ஒருவரைக் கேட்டோம்.

"என்ன ஒரே இராணுவ மயமாக இருக்கிறது. ஜே.வி.பியின் நடமாட்டம் அதிகமோ?"

"இல்லையில்லை. புலிதான் மூதூர், கிளிவெட்டி, தம்பலகாமம் எல்லாம் அவர்கள் தான். இந்தியனுமி போனால் பிறகு என்ன நடக்குமோ தெரியாது. அதுதான் பாதுகாப்புக் கேட்டோம். வந்திருக்கிறார்கள். எங்களுக்கு ஒரே பயம். நாலு மாதமாக வேலை ஒன்றும் இல்லை. வயலுக்கும் வேலைக்குப் போக முடியாது. நிறைய நாட்கள் பட்டினியாயிருக்கிறோம்..." என்று அவர் விபரித்தார்.

"புலிகளும், பிரேமதாசாவும்தான் இப்போது நண்பர்கள் ஆகிவிட்டார்களே. இனி சண்டை இல்லைத்தானே?" என்று கேட்டோம்.

"பிரேமதாச கொழும்பில. அவங்களுக்கு எங்களுடைய பிரச்சினைகள் விளங்கவில்லை. இப்போது நிலைமை சாதாரணம் போல் இருந்தாலும் புலிகளை நம்பேலாது.." அவருடைய குரலில் எவ்வித சந்தேகமும் தொனிக்கவில்லை.


சோமபுரத்தைத் தாண்டி ஈச்சிலம்பத்தைக்கு வந்தவுடனே கண்ணில் பட்டது ஒரு பிக்.-அப் வாகனமும், அது நிறையப் புலிகளும்தான்.

(தொடர்ச்சி 44ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு திறந்த 1990

முப்பது வருடங்களுக்குமுன்னர் உருவாக்கப்பட்ட கிழக்கு-மேற்கு ஜேர்மனிகளுக்கிடையிலான சுவர் உடைந்துவிட்டதாகவும், கொம்யூனிஸ்ட் கட்சி அழிந்துவிட்டதாகவும், சோசலிஸம் செத்துக்கொண்டிருப்பதாகவும். . . . மேற்குலகங்கள் பிரச்சாரம் செய்கின்றன.

கொம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைத்துவம் அகற்றப்பட்டு லெனினின் சிலைகள் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மிகயில் கொர்பச்சேவினால் ஆரம்பிக்கப்பட்ட பெரஸ்ரோயிக்கா கிளாநோஸ் ஆகியவையே இம்மாற்றங்களுக்கான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

இந்நிலையில் 1989 டிசம்பர் மாதம் கிழக்கு ஜேர்மனிக்குச் செல்வதற்காக மேற்கு ஜேர்மனிக்கு வந்தோம்.

இங்கு கிழக்கு ஜேர்மனியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வந்து நடமாடுவதைக் காணக்கூடியதாகவிருந்தது. சோதனை நிலையங்கள் படிப்படியாகத் திறக்கப்பட்டும், தளர்த்தப்பட்டும் மக்கள் சிரமமின்றி இலகுவாக வந்துபோகக் கூடியதாகவிருந்தது.

www.tamilarangam.net

இவற்றைப் பார்க்கும் -போது 3 வருடங்களுக்கு முன்னர் பசுமைக்கட்சியிலும், அல்ரனற்றிவ் லிஸ்ட் கட்சியிலும் ஒழுங்கு செய்யப்பட்ட மகாநாடு ஞாபகத்துக்கு வந்தது.

ஆசிய நாடுகளிலிருந்துவரும் அகதிகளை கிழக்கு ஜேர்மெனி- மேற்கு ஜேர்மெனிகளுக்கிடையிலான சுவர் ஊடாக பிரவேசிப்பதற்கு ஜேர்மெனி மற்றும் ஐரோப்பிய நாடுகளைக் கேட்டுக் கொள்வதே இம் மகாநாட்டின் நோக்கமாகும்.

## கரன்

ஆனால் மேற்கு ஜேர்மெனியும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் குறிப்பிட்டளவு பணத்தை கிழக்கு ஜேர்மெனிக்கு இலஞ்சமாகக் கொடுப்பதன் மூலம் இந்த நுழைவாயிலை அடைப்பதற்கு முடிவு எடுத்தனர். அதன்படி செயற்பட்டனர்.

3 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை என்னவெனில் அகதிகளின் வருகைக்கு உதவிக் கொண்டிருந்த இச் சுவரின் சிறு ஓட்டையான 'நுழைவாயிலை' எப்படியும் மூடிவிட வேண்டும்என்பதாகும். அன்று கிழக்கு ஜேர்மெனிக்கு 'இலஞ்சம்' கொடுத்து அந் நுழைவாயிலை அடைத்த அதே அரசாங்கங்கள் தான் இன்று இச்சுவர் முழுவதையுமேயுடைக்க வேண்டும் என்று முன்னணியில் நின்று கூச்சலிடுகின்றன.

கிழக்கு ஜேர்மெனியின் முன்னைய 'தலைவர்' ஊல்பிறைட் என்பவர், மேற்கத்தைய பொப் கலாச்சார ஊடுருவல், பாசிச ஊடுருவல் ஆகியவற்றைத் தடுப்பதற்கும், கிழக்கு ஜேர்மெனியில் பல்துறைகளிலும் பயிற்சி பெற்ற மக்களை மேற்கு நாடுகளிடம்- பறிகொடுக்காதிருப்பதற்கும் இச்சுவர் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

தற்போது இச்சுவரின் ஊடாக கிழக்கு ஜேர்மெனியர்கள் ஆயிரக்கணக்காக வெளியேறுகின்றனர். இவர்களை 'அரசியல் அகதிகளாக' லேபிள் குத்தி மேற்கு ஜேர்மென் அரசு 'வரவேற்கிறது'.

மேற்கு பேர்லினில் பலருடன் உரையாடியபோது அவர்கள் தெரிவித்தவைகளிலிருந்து 1933 தொடக்கம் 1945 வரையிலான காலப்பகுதியின் வரலாறு பாடசாலைகளில் கற்பிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

1933-1945வரையான காலப்பகுதியின் வரலாறு ஓர் இருண்ட அறை போன்றது. மக்கள் பாசிசத்தை எதிர்த்தபோதிலும் கிட்லர் பலமுள்ளவராகவிருந்தமையினால் பாசிசத்தை முறியடிக்க முடியாதுபோய் விட்டதாக பாடசாலைகளில் போதிக்கப்படுகின்றது.

கிட்லர் இறந்த பின்னர் கூட அவரது ஆதரவாளர்களே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்


ஏப்ரல் 1990 | இலம்: 28

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி .............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. ..... (0231) 136633


கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மனி: 6 மாதங்கள் ... 20,- டி.எம்
1 வருடம் ... 38,- டி.எம்

வங்கி முகவரி: Stadtsparkasse
Dortmund.
கிளை இல: BLZ 440 501 99
கணக்கு இல: 571 001 799

---

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் ... 25,- டி.எம்
1 வருடம் ... 48,- டி.எம்ம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் ... 50,- யு.எஸ்.டொலர்

தபாற்கந்தோர் முகவரி: Postscheckamt
Dortmund
கிளை இல: BLZ 440 100 46
கணக்கு இல: 308 074 68

குறித்த சந்தாவுக்கான உங்கள் நிதியை தூண்டில் முகவரிக்கு அனுப்பி வைத்ததும் அது குறித்த கடிதம் மூலம் அறிவிப்பதால் சஞ்சிகையை அனுப்புதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ள உதவலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(40ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைப்புறமெங்கும் தமிழ், சிங்கள தேசியவாதங்கள் புலியாகவும், சிங்கமாகவும் ஆயுதமேந்திக் காத்துக்கொண்டிருக்கின்றன என அங்கு நின்ற ஒருவர் காதருகில் சொன்னார்.

எல்லைப்புறங்களின் இருபுறமும் ஆழ்ந்த அமைதிக்குள் புதைந்தபடி ஆயுதம் சூழ்ந்த போர்ப்புகை மெல்ல மெல்லக் கவிகிறதான ஒரு பிரமை எங்களுக்குள் எழுந்தது.

---

தொடர்ந்தும் அரச நிர்வாக இயந்திரத்தில் இருந்துவந்தனர். கிட்லரின் காலத்தில் வேலை செய்த நீதவான்கள், ஆசிரியர்கள் போன்றோர் தொடர்ந்தும் பணிபுரிந்தனர்.

மே. பேர்லின் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பினை முடித்த ஒருவருடன் உரையாடியபோது, பாசிசத்துக்கு எதிராக ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியொன்றில் பாசிசத்துக்கு எதிராகப் போராடியவர்கள் என பாடசாலைகளில் கூறப்பட்டபெயர்கள் பாசிசவாதிகளின் பட்டியலில் இருந்ததாகக் குறிப்பிட்டார்.

இதுபற்றி வினவிய போது பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் 1933-1945வரையான காலப்பகுதியில் கிட்லருடன் சேர்ந்து பாசிசத்துக்காக வேலை செய்ததாகவும் அதன்பின்னர் அவர்கள் திடீரென மனமாற்றமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்கு ஜேர்மெனியில் இதுவரை யாரும் பாசிசத்தைப் பற்றி விமர்சிக்கவில்லையெனவும் பாசிசம் சமுதாயத்தின் 'ஒரு மட்டத்தின் கீழ்' இருப்பதால் அது எந்நிலையிலும் வெளி வரலாமென இன்னொருவர் கூறினார்.

மேற்கு ஜேர்மெனியிலும், மேற்கு பேர்லினிலும் வளர்ந்து வரும் பாசிசமும், பாராளுமன்றத்தில் அதிகரித்துவரும் நாஸிக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஆபத்தையும், பயங்கரத்தையும் உருவாக்கும். அகதிகளாக வருபவர்களுக்கும், குடிவரவாளர்களுக்கும் இவை மிகவும் பாதகமாகவே அமையும் என்ற கருத்துகள் பரவலாக பலரிடம் வலுப்பெற்றுள்ளன.

மே. பேர்லினில் உள்ள கென்றிக் கிருமர் வீட்டில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு புதிய நாஸிகளின் பயங்கரவாதம் அதிகரித்துள்ளது பற்றி பத்திரிகைகளில் வெளிவருகிறது.

போகும் வழிகளிலேயே அங்கங்குள்ளவர்களுடன் கருத்துகளைப் பரிமாறியபடி 'பிரசித்தி பெற்ற மதிலுக்கு' வந்தோம்.

(தொடர்ச்சி அடுத்த கலத்தில்)